Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 300
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் கார்த்திகை 25 நம்ழான் 29 புதன்கிழமை [10-12-69]

# யாழ். நகரிலிருந்து தினம் அநுராதபுரத்துக்கு பஸ்ஸில் 3,000 பிரயாணிகள்

## அரை மணிக்கு ஒரு தடவை சேவை

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் அநுராதபுரத்திற்கு 3,000 பிரயாணிகள் பஸ்ஸில் பிரயாணம் செய்கின்றார்கள் ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும் ஒரு தடவை யாழ்ப்பாணத்திலிருந்து விசேஷ பஸ் அநுராதபுரத்திற்கு செல்கின்றது. இதுதவிர முல்லைத்தீவு, வவனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை செல்லும் பிரயாணிகளும் இரு மடங்காக அதிகரித்துள்ளனர்.

இலங்கை போக்கு வரத்து சபை யாழ்ப்பாண டிப்போவைச் சேர்ந்த ஒரு அதிகாரி மேற்கண்டவாறு நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; வழக்கத்திலும் பார்க்க ஒவ்வொரு பாதையிலும் மேலதிக சேவைகளை விட்டும், பிரயாணிகள் தினமும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறார்கள். நாடுமுழுவதும் பஸ் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளதால் வடபகுதிக்கு மேலதிக பஸ்கள் அனுப்பமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரயாணிகளின் வசதிக்காக குறுகிய சேவைகளை குறைத்து நீண்டதூர பஸ் சேவைகளை அதிகரிப்பது பற்றி இ. போ. ச, அதிகாரிகள் ஆலோசனை செய்துவருகிறார்கள்.

எந்தக் 'கியூ'விலென்றாலும் பிரயாணிகள் அதிகரித்து காணப்பட்டால் உடனடியாக அப்பாதைக்கு பஸ் விடப்படுகிறது.

யாழ்ப்பாணம் அனுராதபுரம் சேவையில் மேலும் பிரயாணிகள் தொகை அதிகரித்தால் 10 நிமிடத்திற்கு ஒரு பஸ் விடவேண்டிய நிலைமையும் ஏற்படலாம் அனுராதபுரத்திலிருந்து கொழும்பிற்கு பல விசேஷ சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, தருமபுரம், கண்டாவளை மற்றும் புகையிரத சேவை இருந்த பகுதிகளுக்கு பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன கொடிகாமத்திற்கு காலையிலும்மாலையிலும் பல விசேஷ பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. கொடிகாமத்திற்கு 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை பஸ் சேவை நடந்து கொண்டிருக்கிறது. தொகையான பிரயாணிகள் தங்கள் பாதைக்கு பஸ் தேவையெனக் கோரினால் உடனடியாகசேவை ஒழுங்கு செய்யப்படுகிறது

பஸ் ஊழியர் இரவு பகலாக ஒத்துழைத்து வடபகுதியில் சிறந்த சேவையை ஏற்படுத்திவருகிறார்கள். யாழ்ப்பாண டிப்போ பஸ் சேவை பற்றி மேலதிகாரிகளும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# 2,500 பரீட்சை நிலையங்களில் 14-ல் ஜி.ஸி.ஈ. (சாதாரண) பரீட்சை

## வினாத்தாள்கள் ராணுவ லொறிகளில்வந்தன

யாழ்ப்பாணம், புதன்
நாடு பூராவுமுள்ள 2,500 பரீட்சை நிலையங்களுக்கும் இம்மாதம் 14ந் திகதி நடைபெறவிருக்கும் ஜி.சி.ஈ. (சாதரணம்) பரீட்சை பற்றிய எழுத்துக்களை பரீட்சை இலாகா உயர்தர அதிகாரிகள் நேரில் சென்று செய்து வருகின்றார்கள். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் வினாத்தாள்கள் ராணுவலொறிகளில் யாழ் தபால் நிலையத்துக்கு வந்து சேர்ந்தன.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பரீட்சை நிலையங்களில் செய்யப்படவேண்டிய ஒழுங்குகள்பற்றிநேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த மகாநாட்டில் பரீட்சை இலாகா உதவிக்கமிஷனர் எடுத்துக் கூறினார்:

பரீட்சை நிலையங்களுக்கு உதவி பரீட்சைக் கமிஷனர் திரு. வி. சதாசிவமும் மற்றும் பரீட்சைஇலாகா உயர்தர அதிகாரிகளும் நேரில் சென்றும் கம்பியூட்டர்களே பரீட்சை முடிவுகளை பதிவதால் சுட்டிலக்கம் தெளிவாக எழுதப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவார்கள்.

திருக்கோணமலை, மட்டக்களப்பு மற்றும் தென்பகுதியிலுள்ள பரீட்சை நிலையங்...

பரீட்சை முடியும்வரை இவ்வாறே வினாத்தாள்கள் ராணுவ லொறிகளில் இங்கு வரும் என்றும் அதே வாகனங்களிலேயே விடைத்தாள்களும் கொழும்பு பரீட்சைப் பகுதிக்கு அனுப்பிவைக்க ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி.)

யாழ்ப்பாணத்தில்

## தியேட்டர் மனேஜர் தாக்கப்பட்டார்

### சந்தேக நபர்கள் றிமாண்டில்

யாழ்ப்பாணம், செவ்
யாழ். நகரிலுள்ள தியேட்டர் ஒன்றின் மனேஜர் நள்ளிரவுநேரம் தனிமையில் சென்றுகொண்டிருக்கையில் ஆயுதம்தாங்கிய கூட்டத்தினரால் தாக்கப்பட்டாராம்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சந்தியில் இரண்டுதினங்களுக்கு முன் நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த மனேஜர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக விசாரணை நடாத்திய சப்இன்ஸ்பெக்டர் திரு. சுசந்தா சந்தேகத்தின் பேரில் 8 பேரை கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளார். புரக்டர் ரி. யோகநாதன் மூலம் நேற்று ஆஜர்செய்யப்பட்ட மூவரும் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

காயமடைந்தவர் இரவில் வந்துகொண்டிருக்கையில் வீதிவிளக்குகள் அணைக்கப்பட்டு, திட்டமிட்டு அவரைத் தாக்கியதாகபொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

இதுசம்பந்தமாக மேலும் பலர் தேடப்பட்டுவருகின்றனர். புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (கா. நி.)

## விமானத்தில் இடமில்லை

யாழ்ப்பாணம், புதன்
இம்மாதம்19ந்திகதிவரை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் விமானத்தில் ஆசனங்கள்எதுவும் காலியாக இல்லை. 19-ம் திகதிவரை ஆசனங்கள்பதிவு செய்யப்பட்டுவிட்டன. 11ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து செல்ல ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் விசேஷ விமானத்திலும் காலிஆசனங்கள் இல்லையென யாழ். எயர் சிலோன் அதிகாரி சொன்னார். [கா. நி]

## சரக்குவண்டி சேவையும் பாதிக்கப்படலாம்

### 8-வது நாளாக தொடர்ந்து வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், புதன்
கடந்த 8 நாட்களும் சேவையில் சேவைசெய்து வந்த சரக்குவண்டிகளும் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதுபற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென்றும் புகையிரதப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று காலை யாழ்ப்பாணத்திலிருந்துஅநுராதபுரத்துக்கு ஒரு சரக்குவண்டி சென்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வழக்கத்தில் கலகலப்பாகக் காணப்படும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் வெறிச்சோடிக்கிடக்கிறது.

புகையிரதசேவை ஸ்தம்பித்ததால் புகையிரதநிலைய மோட்டார்களுக்கும் டாக்சி சொந்தக்காரர்களுக்கும்நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

## ஒரேபார்வையில் வேலை நிறுத்தங்கள்

## தந்தை கொல்லப்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன் நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த மனேஜர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக விசாரணை நடாத்திய சப்இன்ஸ்பெக்டர் திரு. சுசந்தா சந்...

...பட்டு, திட்டமிட்டு அவரைத் தாக்கியதாகபொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

இதுசம்பந்தமாக மேலும் பலர் தேடப்பட்டுவருகின்றனர். புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (கா. நி)

...ட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் விஞத்தாள்கள் ராணுவலொறிகளில் யாழ் தபால் நிலையத்துக்கு வந்து சேர்ந்தன.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பரீட்சை நிலையங்களில் செய்யப்படவேண்டிய...

...பரீட்சை முடிவுகள் ...தால் சுட்டிலக்கம் தெளிவாக எழுதப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவார்கள்.

திருக்கோணமலை மட்டக்க...யுமற்றும் தென்பகுதியிலுள்ள பரீட்சை நிலையங்களுக்கும் பரீட்சை இலாகா உயர்தர அதிகாரிகள் நேரில் சென்று ஒழுங்குகளை அமைப்பார்கள்இப்பரீட்சையில் 3லட்டம் மாணவர்கள் தோற்றுகிறுர்கள் (அனு.நி)

தெரிவித்தார். (கா. நி.)

...ஞர். [கா. நி]

காரி ஒடுவர் தெரிவித்தார். நேற்று காலை யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்...

மோட்டார்களுக்கும் டாக்சி சொந்தக்காரர்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

---

தென்வியட்ஞமில்

# படுகொலைக்குக் காரணமாயிருந்த ராணுவத்தினர் தண்டிக்கப்படுவர்

## ஜனதிபதி நிக்ஸன் அறிவிப்பு

வாஷிங்டன், டிச. 9

'தென்வியட்ஞம் குடிமக்களின் படுகொலைக்கு காரணமாயிருந்த எந்த ஒரு அமெரிக்க ராணுவ அதிகாரியும் கடுமையான தண்டனைக்குள்ளாவார்' என அமெரிக்க ஜனதிபதி திரு. நிக்சன் இன்று அறிவித்துள்ளார்.

வாஷிங்டனில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்வியட்ஞம் குடிமக்கள் சிலர் படுகொலைசெய்யப்பட்டது உண்மைதான் என ஒப்புக்கொண்ட அவர் அநீதியான முறையில் நடந்துகொண்ட எவரும் தண்டனைக்குள்ளாவார் என வலியுறுத்திக் கூறிஞர்.

திரு. நிக்சன் வியட்ஞம் போர் சம்பந்தமாக தமது கருத்தை வெளியிடுகையில் இது முடிவுறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகக் கூறிஞர்.

இன்னும் சில வாரங்களில் தென்வியட்ஞமிலிருந்து மேலும் அமெரிக்க துருப்பினர் திருப்பி அழைக்கப்படுவர் என்றும் அவர் எடுத்துக் கூறிஞர்,

## தேடுவாரற்ற சைக்கிள் பொலிஸில்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பஜாரில் பூட்டப்பட்ட நிலையில் தேடுவாரில்லாமல் மூன்று நாட்களாகக்கிடந்த சைக்கிள் ஒன்று இப்போது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

வி. எப். 60699 இலக்கமுள்ள இச்சைக்கிளின் சொந்தக்காரர் தகுந்த அடையாளங்கள்காட்டிஞல் சைக்கிளைப் பெற்றுச் செல்லலாம் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப்பொலிஸ் பகுதியினர் தெரிவித்தனர். (கா.நி)

---

பருத்தித்துறை

# நகைக்கடை முதலாளி கொலை வழக்கு: தையல்காரர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, செவ்.

இவ்வழக்கின் முடிக்குரிய 2வது சாட்சியானகந்தையா தவராசா 'கறுப்பு உள்ளங்கி (சஸ்பென்ரர்) தைத்துத்தரும்படி துணி ஒன்று தந்தார். அத்துணியில் இரண்டு உள்ளங்கி தைத்தேன். அதில் ஒன்றை எனது கூலிக்கு எடுக்கும்படியும் சொல்லி மற்றதை அவர் பெற்றுக் கொண்டார். இங்கே காட்டப்பட்டசாரம் முதலாம் எதிரிக்கு என்ஞல் தைத்துக் கொடுக்கப்பட்டதென்று என்ஞல் சரியாகச் சொல்ல முடியாது. நெல்லியடியில் கடந்த 8 வருடகாலமாக தையல் கடை வைத்திருக்கும் நீர்கொழும்பைச் சேர்ந்த யோசேப் மொரிஸ் என்னும் 24வயதுடையவர் இவ்வாது பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

இவ்வழக்கில் அல்வாய் தெற்கைச் சேர்ந் ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச்சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும் கடந்தவருடம் கார்த்திகை மாதம் 2ந்திகதி பருத்தித்துறையைச்சேர்ந்த நகை வியாபாரியான எம்.எம். சுல்தான் மொகதீன் என்பவரை சதிசெய்து கொலை செய்ததாக இரகசியப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டிருந்தது.

இறந்தவரின்மகஞன எஸ். எம். மொஹதீன் தையூப் சாட்சியமளிக்கையில்: இறந்தவர் எனது தகப்பஞர். அன்று அவருடைய சடலத்தை அடையாளம் காட்டினேன். எனது விடுமுறைக் காலத்தில் இடையிடையே எனது தகப்பஞருடன்வந்து தங்கிச் செல்வேன் என்று சொன்ஞர்.

எஸ். எம், எஸ். கலீல், இன்ஸ்பெக்டர் கே. பி. ஜயசூரியா ஆகியோர் சாட்சியமளித்த பின் மேல் விசாரணை இம்மாதம் 20-ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் புறக்டர்களான சி. தாமோதரம்பிள்ளையும் வி. செல்லத்தம்பியும் 2ம் எதிரி சார்பில் புறக்டர் என். நடராசாவும் ஆஜராயிருந்தனர். ஏ, எஸ் பி. டி. ஈ. சில்வா இன்ஸ்பெக்டர் வி. டபிள்யூ செனிவரத்தின உதவியுடன் வழக்கை நடத்திஞர்.

---

## விஞத்தாள்கள் அனுமதிப்பத்திரங்கள்

ஆயுதம் தாங்கிய ராணுவலொறிகளில் ஜி சி ஈ சாதாரண பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களும் விஞத்தாள்களும் நேற்றும் நேற்று முன்தினமும் யாழ் தபால் நிலையத்துக்கு வந்துசேர்ந்தன. இவைகளை உடனடியாகவே விநியோகம் செய்ய ஒழுங்குகள், செய்யப்பட்டுள்ளன

## ஒரேபார்வையில் வேலை நிறுத்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| 0 | புகையிரத பகுதியினர் | — | 8-வது நாள் |
| 0 | ஆஸ்பத்திரி ஆய்வுகூட தொழில்நுட்ப ஊழியர் | ... | 13-வது நாள் |
| 0 | உடுக்குகூட்டுத்தாபனம் | ... | 6-வது நாள் |
| 0 | பசளைகூட்டுத்தாபனம் | ... | 7-வது நாள் |
| 0 | சுருட்டுத்தொழிலாளர் | ... | 8-வது நாள் |
| 0 | கொழும்பு பல்கலைக்கழக மாணவர் | ... | 6-வது நாள் |
| 0 | வித்தியாலங்கார மாணவர் | ... | 4-வது நாள் |

## உத்தேச வேலைநிறுத்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| 0 | துறைமுக தொழிலாளர் | ... | 12-ம் திகதி |
| 0 | சுங்கபகுதியினர் | ... | 13-ம் திகதி |
| 0 | ஒலிபரப்புகூட்டுத்தாபன ஊழியர் | ... | 15-ம் திகதி |

---

மனித உரிமை பிரகடனம்

# "பெரும்பகுதி மக்கள் வறுமையில் வாழ்வது கவலை"

—மகாதேசாதிபதி செய்தி

கோட்டை, செவ்வாய்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினுல் 1948-ம் ஆண்டு டிசம்பர் 10-ந்திகதி மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. இவ்வுரிமைகள் சர்வதேசரீதியில்பிரகடனப் படுத்தப்பட்டு இன்று 21 வருடங்கள் ஆகின்றன. இன்றைய தினத்தை மனித உரிமைகள் தினமாக நாம் கொண்டாடுகிறேம். ஐக்கிய நாடுகள் சபை கடந்த சில ஆண்டுகளாக மனித உரிமைகள் பிரகடனத்தின் தத்துவங்களைச்செயலில் காட்டிவருகிறது. இச்சபை தொடர்ந்தும் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் பொருளாதார சமூக கலாச்சார உரிமைகளைப் பூரணமாக அனுபவிக்க உதவும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் எங்கெங்கு தேசிய அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டுமோ ஆங்காங்கு அவைகளை நிலைநாட்ட உதவுவதோடு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும் என்பதில் நம்பிக்கையுண்டு.

மனித உரிமைகள் பிரகடனதினத்தையொட்டி மகாதேசாதிபதி வில்லியம்கோபல்லவா வெளியிட்டுள்ள ஆசிச்செய்தியில்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தமது ஆசிச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச சமூகத்துக்கு பொதுவான தொடு தரத்தையுருவாக்குவதற்குமனித உரிமைகள் பிரகடனம் வழிவகுத்துள்ளமை பாராட்டத்தக்கது எனினும் உலகின் பெரும் பகுதி மக்கள் குறைந்த வாழ்க்கைத் தரத்தோடு வறுமையில் வாழ்வது நாம் வருந்தத்தக்கதொன்றுகும். இது மட்டுமின்றி பல நாடுகளில் மனித உரிமைகளை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க இயலாதவாறு வன்முறைகளும் வேற்றுமைகளும் நிலவுகின்றன.

மனித உரிமைகள் பிரகடனத்தின் 21 வது ஆண்டு தினமான இன்று அப்பிரகடனத்தின் குறிக்கோள்களை அதாவது தத்துவங்களை மனதில் கொண்டு நாம் மனிதகுல முன்னேற்றத்தையிட்டு ஒவ்வொரு தனி மனிதனும் தனது உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவிக்கத் தக்கவாறு செயலாற்ற எம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

## பிரதமரும் அமைச்சர்களும்

### 30-ம் திகதி யாழ். வருவர்

யாழ்ப்பாணம், புதன்

பிரதமர் திரு. டட்லிசேனநாயகா மீண்டும் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம்வரவிருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

30 ம் திகதி யாழ். முற்றவெளியில் நடைபெறும் தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டின் கடைசிநாள் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவே பிரதமர் இங்கு வரவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பிரதமருடன் பல சிரேஷ்ட அமைச்சர்களும் இங்கு வருவார்கள் என்றும் 30-ம் திகதி மாலை விசேஷ விமானத்தில் வந்து அன்றிரவே கொழும்பு திரும்புவார்கள் என்றும், 13-ம் திகதி தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜீ. பொன்னம்பலம் மலாயாவிலிருந்து கொழும்பு திரும்பியதும் இது நிச்சயப்படுத்தப்படும் என்றும், காங்கிரஸோடு நெருங்கிய தொடர்புடைய பிரமுகர் ஒருவர் சொன்ஞர். (கா. நி.)

---

# தந்தை கொல்லப்பட்டார் மகன் கைது

யாழ்ப்பாணம், புதன்

நான்கு பல்லுகள் உடைந்தநிலையில் கத்தியால் வெட்டப்பட்டுக் கிடந்தாராம் தந்தை. இதுசம்பந்தமாக அவரது மகன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புன்ஞலைக்கட்டுவன் பகுதியில் நேற்றிரவுநடைபெற்றதாக பொலிசார் தெரிவித்தனர் இங்குள்ள நாகன் என்ற (60 வயது) தோட்டத் தொழிலாளியே இவ்வாறு கத்திவெட்டுக்குள்ளானவராவார். இவரது மகன் கிட்டிணன் என்பவரைப் பொலிசார் இதுசம்பந்தமாகக் கைது செய்தனர்.

சுன்ஞகம் பொலிசாரும், யாழ். ஆஸ்பத்திரிப் பொலிசாரும் இதுசம்பந்தமான விசாரணை நடத்தி வருகின்றனர். (கா. நி.)

---

சுருடடுத் தொழிலாளர்

# பத்தாயிரம்பேர் வேலைக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், புதன்

156 சுருட்டு உற்பத்தியாளர்கள் ஆயிரம் சுருட்டுக்கு 15 ரூபா வழங்க சம்மதித்ததைத் தொடர்ந்து 10000 தொழிலாளர்கள வேலைக்ருத்திரும்பிவிட்டார்கள். இவ்வேலைநிறுத்தத்தில் 13,000 சுருட்டுத்தொழிலாளர் குதித்தனர். இப்போது 3000 பேர் மட்டுமே வேலைநிறுத்தம் செய்கின்றனர். அவர்களுக்ரும் விரைவில் வெற்றி கிடைத்துவிடும்'

இவ்வாறு அகிலஇலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் விடுத்துள்ளஅறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

'சம்பளம் கொடுக்காமல் இரகசியமாகத் தொழிலாளர்களைக்கொண்டு வேலை நடாத்த சிலர் முயன்றனர் அவற்றையெல்லாம் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர்சங்கம் முறியடித்துவிட்டது' என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரி

(4-ம் பக்கம் பார்க்க

---

இன்று யாழ் தபால்நிலைய பரிவர்த்தனை திறப்பு விழா

# பொறியியல் பகுதிக்கு அழைப்பு அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

இன்றுயாழ். தபாற்கந்தோரில் நடைபெறும் புதிய பரிவர்த்தனை திறப்புவிழாவுக்கு பொறியியலாளர் பகுதியினருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையென்ற செய்தியை மறுத்த போஸ்ட் மாஸ்டர் திரு. ஏ. ஈ. ஜே. பெனடிக்ட் மூன்று நாட்களுக்கு முன்னரே அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுவிட்டதாகச் சொன்ஞர்.

இன்றுகாலை 10 மணிக்கு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. வேர்ணன் அபயசேகராவால் நான்கு புதிய பரிவர்த்தனைகளும் திறந்து வைக்கப்படும். திரு. வேர்ணன் நேற்று விமானமூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்

அவ்வமயம் போஸ்ட் மாஸ்டர் திரு. பெனடிக்ட், வேர்ணனை தபால்நிலைய வாயிலில்மாலையிட்டுஅழைத்துச்செல்வார்.

திரு.வேர்ணன் அபயசேகராவின் உத்தரவின் பேரிலேயே வெளியார் எவருக்கும் இவ்வைபவத்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையென்றும், இவ் வைபவத்தை பொறியியலாளருடன் சேர்ந்து நடத்துமாறு தன்னை திரு.வேர்ணன் பணிக்கவில்லை யென்றும் திரு. பெனடிக்ட் மேலும் தெரிவித்தார்.

திறப்புவிழா வைபவத்தைத் தொடர்ந்து தபால்நிலைய அதிகாரிகளுடன் திரு வேர்ணன் பேச்சுவார்த்தை நடத்துவார். [கா.நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சகல பகிரங்க பரீட்சைகளுக்குமுரிய பொதறிவு வினு—விடை புதிய பதிப்பு 2000க்கு மேற்பட்ட வினு—விடைகள். ஆக்கம்: திரு. த. ந. பஞ்சாட்சரம். விலை: 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1590

EN 81 BSA (Bantam) நல்ல உன்னத நிலையில் விற்பனைக்கு உண்டு. ஜெயராம் அன்ட் கொம்பனி, "றதி பில்டிங்" 91/4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1600

### தேவை

சித்திரத்தில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை. பயிற்சியுடன் ஊதியம் வழங்கப்படும். பயிற்சி பெற்ற பின் நாள் சம்பளம். மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது விண்ணப்ப முடிவு திகதி 20-12-1969. புளோட்டேஸ், 37—39, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1598

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

பருத்தித்துறை, செவ். வதிரி 'டைமண்ட்ஸ்' விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடக்கவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வடமராட்சியிலுள்ள பல விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றவிருக்கின்றன. அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக ஆதரவில் நடக்கும் சுற்றுப்போட்டியிலும் பலகழகங்கள் கலந்து கொள்ள . விருக்கின்றன. பருத்தித்துறை யுனைற்றெட் விளையாட்டுக்கழக ஆதரவில் நடக்கவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளிலும் பல கழகங்கள் கலக்கின்றது.

## வியாசப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, செவ் அகில இலங்கை விஞ்ஞான சங்கம் இவ்வாண்டு நடாத்திய வியாசப்போட்டியின் முடிவுகள் வருமாறு;

ஆங்கிலம்: யோகேசப்பால் சந்திரா பெர்னாந்து (மொரட்டுவா அர்ச் செபஸ்தியன் கல்லூரி)

தமிழ்: செல்வி சிவேஸ்வரி செல்வத்துரை புத்தூர்

## இராமநாதன் கல்லூரி

### நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

சௌமிய ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத்தெட்டாம் நாள் (13-12-69) மாலை 5-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

1873 அதிபர்.

## நெல்லியடி பட்டினம் கேள்வி விளம்பரம்

1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் திகதி (17-12-1969) முற்பகல் 10-00 மணி வரைக்கும் மேற்படி பட்டின விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைக்கு "சீல்" வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 25-00ம், பத்திரக் கட்டணம் ரூபா 5-00ம் செலுத்தியதின் பேரில் 15-12-1969 முற்பகல் 11-00 மணி வரை விசேட ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் யாவும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

அ. அ. ஜோசப்,
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினம்.

### வேலையின் விபரம்

1. நெல்லியடிப் பட்டினத்திலுள்ள எட்டுத் தெருக்களில் மரங்களும் பாதை மருங்கிலுள்ள கிளைகளும், கொப்புகளும் தறித்து அகற்றல்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி,
5-12-1969. 1874

## "இந்திரா வீட்டின்முன் தீக்குளிப்பேன்"

வேலூர், டிச. 9

'காமராஜர்தான் உண்மையான கோஷலிசவாதி. ஆனால் இந்திரா ஆதரவாளர்களான சுப்பிரமணியம், பக்தவத்சலம், டி. டி. கே.

விவசாயக் கல்லூரி

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ் குண்டகசாலை விவசாயக் கல்லூரியின் 1969ம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற இறுதிப் பரீட்சையின் தமிழ்ப் பிரிவில் தேர்ச்சியடைந்தோர் விபரம் வருமாறு:

### 1-ம் பிரிவு

பயிர் வேளாண்மை பிரிவு: பி கணேசமூர்த்தி, கே ஜெயமனிதாஸ், எம் சோமசுந்தரம், வீ சீதாலட்சுமி. கிராமிய மனையியல் பிரிவு: ஜி அற்புதம், ஜனுபா சித்தி ஜமுனு சாகுல் ஹமீது, விவசாயப் பொறியியல் பிரிவு: கே சி அற்புதகுமார்.

### 2-ம் பிரிவு

பயிர் வேளாண்மைபிரிவு: ஐ கேதீஸ்வரன், எஸ் சுப்பிரமணியம், எம் காராளசிங்கம், இ கிருஷ்ணபிள்ளை, என் கனகரத்தினம், கே மோகனராசா, ஜி செல்வராசா, எஸ் அன்னம், எஸ் ஞானமணி விவசாயப் பொறியியல் பிரிவு: கே எப் பிகுராடோ, மிருக பரிபாலன பிரிவு: வீ நடராசா, கே நல்லதம்பி, சி சின்னத்துரை, எஸ் செல்வராசா, வீ செல்லத்தம்பி, கே தெய்வேந்திரராசா, கே சுந்தரம் பிள்ளை. கிராமிய மனையியல்: வீ பங்கஜமலர், கே கனகமலர், ஜி தவராஜமலர், எஸ் லெட்சுமி கே சரஸ்வதிதேவி, கே தேவகி, எஸ் புவனராணி.

### 3-ம் பிரிவு

மிருக பரிபாலன பிரிவு: வி எஸ் பாலசிங்கம், எஸ் பாலசுந்தரம், கே சிவராசா. விவசாயப் பொறியியல் பிரிவு. கே தவரட்ணராஜா. ......

## ஊறணி வென்றது

மாவிட்டபுரம், செவ். கோப்பாய் கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் கோஷ்டியும், ஊறணிபுனித அந்தோனியார் சனசமூக, கிராமமுன்னேற்றசங்க இளைஞர் கோஷ்டியும் மோதிய உதைபந்தாட்ட போட்டியில் ஊறணி கோஷ்டி 3-1 கோலால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது.

காங்கேசன்துறை பட்டின சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சோமேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார்,

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். -ராஜகுலோ...

# 'இலவச கல்வியின் வித்து நாவலர்'

## — ஹெரிடீ. சில்வா

நாவலப்பிட்டி, செவ். "இலங்கையில் இலவசக் கல்வியின் தந்தையான அண்மையில் காலஞ்சென்ற திரு. சி. டபிள்யு. கன்னங்கராவிற்கு பல வருடங்களுக்கு முன்பே இலவசக் கல்வியின் அவசியம் பற்றி எடுத்துரைத்தவர் நாவலர். லவசக் கல்வியின் வித்து அவர்"

இவ்வாறு கதிரேசன் கனிஷ்டவிததியாலயத்தில் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க புகையிரதப்பகுதி ஊழியர்கள் நடாத்திய நாவலர் விழாவில்சிறப்புரையாற்றிய அநுருத்த கல்லூரி அதிபர் திரு. டி. ஹெரிடீ சில்வா கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், நல்ல நூல்கள் ஆசிரியர்களுக்கு மட்டுமே உரிமையாயிருந்த அக்காலப் போக்கை மாற்றியமைக்கவே நாவலர் பல புத்தகங்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார. வெளிநாட்டாரின் கொடுமையால் மொழி, மதத்திற்கு இடர் ஏற்பட்ட காலத்தில் தேசிய வீரர்கள் தோன்றி அதனை களைந்தனர் அவ்வரிசையில் தமிழுக்கும் சைவத்திற்கும் காப்பாளராக தோன்றிய தேசிய வீரர் நாவலர் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் உரையாற்றிய பண்டிதர் செ. நடராசா - 'நாவலர் காலத்திலிருந்த அந்நிய மத கலாச்சார எதிர்ப்பைவிட அவர் புகழ்பாடும் இந்தக் காலத்தில் உண்மைச் சைவத்திற்கு சைவம் என்ற பெயரால் போலிக்கொள்கைகள் புகுந்துசெய்யும் இடர் பெரிது. எனவே இந்த ஆபத்தை தடுத்து நிறுத்தவேண்டும். இல்லையேல் வெறும் தோற்றப்பொருள்களாகவே சைவமும் தமிழும் காணப்படும். அதன் உயிர் நீங்கிவிடும் என்று கூறினர்.

மேலும்இவ்விழாவில் திரு. சு. திருநாவுக்கரசு. செல்வி செ. நாகவள்ளி உட்படப் பலர் உரையாற்றினர்.

## உதைபந்தாடடம்

அல்லைப்பிட்டி. செவ் விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தினரால் காலஞ்சென்ற திரு. இ. நல்லதம்பி ஜே. பி.யின் ஞாபகார்த்த[illegible] வெற்றிக்கேடயத்திற்கா[illegible] நடாத்தப்பட்டு வரும் 'பி' பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புங்குடுதீவு சிவலைப்பிட்டி சன சமூக நிலைய விளையாட்டுக் [illegible] தீவகத்து[illegible] சன ச[illegible] நிலைய விளையாட்

## உயர்கல்வி விசாரணைக்கு றோயல் கமிஷன்

கோட்டை, செவ். இலங்கையின் உயர் கல்விமுறை பற்றி விசாரணைசெய்வதற்கு மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா ஒரு கமிஷனை ('றோயல் கமிஷன்') ஞாயிற்றுக்கிழமையன்று நியமித்துள்ளார்.

5 அங்கத்தவர்களைக் கொண்ட இக்கமிஷனுக்குத் தேசிய உயர் கல்விச்சபையின் முன்னைய அங்கத்தவரான திரு. வில்மெட் பெரேரா தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கையின் உயர்கல்வி நிலைமையை விசாரணை செய்து, ஆராய்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வியில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இக்கமிஷனுக்குக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ......

## அரசாங்கம் தவறிவிட்டது

அல்லைப்பிட்டி, செவ். "இன்றைய வளர்ந்துவரும் சமுதாயத்தின் வேலையில்லாப் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. அரசாங்கப் புள்ளிவிபரத்தின்படி ஒன்பது இலட்சம் பேர் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். இதற்குக்காரணம் இன்றைய அரசியல்அமைப்பே. காலனிஆதிக்கக்கல்வி முறையே எமது நாட்டில் இன்னும் இருப்பதால்தான் வேலையற்றோர் பிரச்னை கூடிக்கொண்டு வருகிறது."

இவ்வாறு வேலணையில் நடைபெற்ற தீவுப்பகுதி வாலிப முன்னேற்றச்சங்கக் கூட்டத்தில் அதன்தலைவர் திரு. வ. சண்முகராசன் குறிப்பிட்டார்.

மக்கள்

டிசம்பர் 22ல்

## நாவலப்பிட்டி நகரசபை தேர்தல்

நாவலப்பிட்டி, செவ் நாவலப்பிட்டி நகரசபைத் தேர்தல் டிசம்பர் 22ந் தேதி நடைபெறவிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி 8 வட்டாரங்களிலும், லங்கா சமசமாஜக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் 2 வட்டாரங்களிலும் போட்டியிடுகின்றன.

முதலாம் வட்டாரத்தில் தமிழ் இளைஞர் திரு. அ. இராமநாதனும், ஆறும் வட்டாரத்தில் திரு. இரா. தங்கவேல் என்பவரும் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகின்றனர்.

## குற்றங்களை தடுக்க நடவடிக்கை

கோட்டை, செவ் குற்றங்களைத் தடுப்பதில் பொலிசார் இப்போது கடைப்பிடித்துவரும் புதிய வழி நல்ல பலனை அளித்து வருவதாகத் தெரியவருகிறது.

பண்டிகைத் தினங்களில் விழாக்களை ஏற்பாடுசெய்து இதில் பொதுமக்களை உற்சாகத்துடன் கலந்துகொள்ள வைப்பதேஇப்போதுகடைப்பிடிக்கப்பட்டுவரும் புதிய முறை.

இவ்விதம் இனிவரும் பண்டிகைகளில் விழாக்களை நடத்தப் பொலிசார் கிராம சேவகர்கள் மற்றும் சமூகநல இயக்கங்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை நாடியுள்ளனர்.

இவ்வித வைபவ நாட்களில் ரோந்து நடவடிக்கையையும் விஸ்தரிக்க பொலிசார் ஒழுங்குசெய்துள்ளனர்

குற்றங்களை முற்றாகத் தடுப்பதில் தமக்குப் பூரண ஒத்துழைப்புத் தருமாறு பொலிசார் பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## குடும்பத் திட்டம்

**ராசம்மா:** ஒவ்வொரு வருசமும் பிள்ளையைப் பெத்து ஏன் வீணுகக் கஷ்டப்படுகிறாய் செல்லம்?

**செல்லம்:** என்ன செய்யிறது ராசம்? நாங்கள் நினைக்கிறமாதிரி விரும்பின நேரத்தில் மட்டும் பிள்ளை பெற முடியுமே?

**ராசம்மா:** ஏன் முடியாது! என்னைப் போல நீயும் குடும்பத் திட்டத்தைக் கடைப்பிடி.

## 'சமய இயக்கங்கள் சொத்துக்களை வெளியிட வேண்டும்'

### பௌத்த காங்கிரஸ் கமிடடி சிபார்சு

கோட்டை, செவ்வாய் 'சகல சமயஇயக்கங்களும் தமது சொத்து விபரங்களை வெளியிட வற்புறுத்தப்பட வேண்டும்' என அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தெரிவுக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

பௌத்த மதத்தவர்கள் தேவைகள் சம்பந்தமாக ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக மேற்படி காங்கிரஸால் நியமிக்கப்பட்ட கமிட்டியேஇவ்வாறுசிபார்சு செய்துள்ளது.

பேராசிரியர் எல். ஜி. ஹேவாகே, திருவாளர்கள் குணசீலா விதானகே, குணசோமா, பஹட்டயராச்சி, பி. சி. பெரேரா, லீலாநந்தா கலதெரஹேவாகே, ஜெயசேனு ஆகியோர் அடங்கிய இந்தக் கமிட்டிசெய்துள்ள மற்ற சிபார்சுகள் வருமாறு:

சாசன மண்டலம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

தேசிய கல்விக்கமிஷன்ஒன்று அமைக்கப்பட்டு எல்லோருக்கும் இதில் பிரதிநிதித்துவம் இருக்கவழி அமைக்கப்பட வேண்டும்.

பெரும்பான்மையான மாணவர்கள் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கும் பாடசாலைகளில் பௌத்தமத தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். இவ்விதபாடசாலைகளில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் பௌத்தமதத்தவர்களாக இருக்கவேண்டும்.

பத்திரிகைகவுன்சில் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

இலங்கையரல்லாதவர்கள் இங்கு காணி பெறுவது தடுக்கப்படவேண்டும்.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க தீவிரநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மகாசங்கத்தின் அங்கத்தவர்களை அரசியல் அலுவல்களுக்காக ஈடுபடுத்துவதை சகல அரசியல் கட்சிகளும் விலக்கிக்கொள்ள வேண்டும்

சமூகசேவைகளுக்காக சமய இயக்கங்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவி சமமாகப் பங்கிடப்பட வேண்டும்.

வெளிநாட்டுத்தூதரக சேவை திருத்தியமைக்கப்படவேண்டும்.

## பொதுமக்கள் கஷ்டம்

காத்தான்குடி, செவ் காத்தான்குடிக்கு அண்மையிலுள்ள பாலமுனைக் கிராமத்துக்கு மருத்துவ மாது இல்லாமல் பொதுமக்கள் கஷ்டமடைகின்றனர். பாலமுனைப் பகுதிக்குத் தற்காலிகமாகக் கடமையாற்றும் மருத்துவமாது ஆரையம்பதியில் இருப்பதால் சுமார் இரண்டரை மைல் தூரம் மருத்துவ மாதைத் தேடிப் போகவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

## சங்கீத சபைகள்

கொழும்பு, செவ் இசையின் பயனை மனிதன் பரிபூரணமாக அடைய இதுபோன்ற சங்கீதசபைகள் இருப்பது நல்லதென்று வெள்ளவத்தை சம்மாங்கோட்டை ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடந்த இலங்கை சங்கீதசபையின் இசைவிழாவில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு கூறினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகசுந்தரம் சிவகாமசுந்தரி

சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையாவின் அருமை மகளும், காலஞ்சென்ற ம. வே. திருஞானசம்பந்தரின் மருமகளும், விற்பனை இலாகாவில் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கும் திரு. தி. சண்முகசுந்தரத்தின் அருமை மனைவியும், திருமதி ப. அமிர்தலிங்கத்தின் மருமகளும், திருமதி கே. சி. சண்முகரத்தினம் அவர்களினதும், அம்பேவெல புகையிரதநிலைய அதிபர் திரு. குகேந்திரன் அவர்களினதும் மைத்துனியும், சுகுகுமாரன், பாலகுமாரன், சுந்தரமணி, குகன் ஆகியோரின் அருமைத் தாயாருமாகிய சிவகாமசுந்தரி காலமாகிவிட்டார். அன்னாரின் பூத உடல் 6, பி ஏ. தம்பி ஒழுங்கையிலிருக்கும் இல்லத்திலிருந்து இன்று காலை 9 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 1872

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியின் முடிவுகள் வருமாறு;
இங்கிலம்: யோசேப்
[redacted]ால் சந்திரா பெர்ஞந்து
மொரட்டுவா அர்ச் செபஸ்
தியன் கல்லூரி)

தமிழ்: செல்வி சிவேஸ்வரி செல்வத்துரை புத்தூர் (ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி)

ஆங்கிலம்: ஏ. கேதீச்சரன் (இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரி)

இவர்களுக்கான பரிசில்கள் இம்மாதம் கொழும்பு விஞ்ஞான சங்க மண்டபத்தில் வழங்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## தீக்குளிப்பேன்

வேலூர், டிச. 9

'காமராஜர்தான் உண்மையான சோஷலிசவாதி. ஆனால் இந்திரா ஆதரவாளர்களான சுப்பிரமணியம், பக்தவத்சலம், டி. டி. கே. போன்றவர்கள் அவரைத் தவறான முறையில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்'. என்று நிஜலிங்கப்பா கோஷ்டியைச்சேர்ந்த திரு. நெடுஞ்சேரலாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்:

''காமராஜர் பற்றிய தவறான பிரச்சராத்தை நிறுத்தாவிட்டால், இந்திரா வீட்டின் முன் தீக்குளிப்பேன்'' என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

வரன் மத்தியஸ்தம் வகித்தார்,

வரும் 'பி' பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புங்குடுதீவு சிவலைப்பிட்டி சன சமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும் காரைநகர் நீலிப்பந்தனை சன சமூக நிலைய விளையாட்டுக்கோஷ்டியினரும் மோதிக்கொண்டனர்.

ஆட்டம் முடிவடையும் போது 4—1 கோல்களால் நீலிப்பந்தனைக் கோஷ்டியினர் சிவலைப்பிட்டிக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். வேலணை மத்திய கல்லூரி விளையாட்டுத்திடலில் நடைபெற்றஇப்போட்டிக்கு திரு. துளசிகாமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இவ்வாறு வேலணையில் நடைபெற்ற தீவுப்பகுதி வாலிப முன்னேற்றச்சங்கக் கூட்டத்தில் அதன்தலைவர் திரு. வ. சண்முகராசன் குறிப்பிட்டார்.

## மக்கள் வங்கிக்கிளை

கொழும்பு, செவ்.

கொழும்பு பல்கலைக்கழக வளவில் 86-வது மக்கள் வங்கிக் கிளையை ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று திறந்து வைத்தார். இந்நாட்டிற்கு மக்கள் வக்கி பெரும் சேவையாற்றிவருவதாக அவர் தெரிவித்தார்.


நினைக்கிறமாதிரி விரும்பின நேரத்தில் மட்டும் பிள்ளை பெற முடியுமே?

ராசம்மா: ஏன் முடியாது! என்னைப் போல நீயும் குடும்பத் திட்டத்தைக் கடைப்பிடி. உடனே விபரமாக ஒரு கடிதம் போடு. ஆலோசனை கிடைக்கும்.

குடும்பத் திட்டத் தகவல்,
457, 2-ம் மாடி,
காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.
[கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும்]


அவர்களினதும் மைத்துனியும், சுகுகுமாரன், பாலகுமாரன், சுந்தரமணி, குகன் ஆகியோரின் அருமைத் தாயாருமாகிய சிவகாமசுந்தரி காலமாகிவிட்டார். அன்னாரின் பூத உடல் 6, பி ஏ. தம்பி ஒழுங்கையிலிருக்கும் இல்லத்திலிருந்து இன்று காலை 9 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 1872


அரைச்சலார்
1-1-70 முதல் 15-1-70 வரை
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜன
நடித்த
குலவிளக்கு

இன்று மட்டும்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன்—கே ஆர். விஜயா
நடித்த
நினைவில் நின்றவள்

கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நாளை முதல்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி, ஆர். -ராஜசுலோசனா
நடித்த
நல்லவன் வாழ்வான்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - கே. ஆர் விஜயா
நடித்த
செல்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா
நாகேஷ்
நடித்த
தங்கை

கடைசி வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
தென்னகத் திரைகளில்
100 நாட்களுக்கு மேல்
ஓடிய வெற்றிச்சித்திரம்
எதிர் நீச்சல்
இரவு 9-45க்கு மட்டும்
எம் ஜி ஆர் -பானுமதி
நடித்த
மதுரை வீரன்

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
BEAUTIES
by
NIGHT

MANOHARA
Daily 4-45, 7&9-45, p. m
Poya, Pre-poya 4 shows
Janet Leigh
Edward G. Robinson
in
OPERATION
GRANDSLAM
(Scope -color)

REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poya, Pre-Poya 4 shows
Fernando Sancho
&
Raffaella Carra
in
OUR AGENT FLIT
(Eastman color)


# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 25-ம் திகதி (10-12-69)

**மேஷம்**- பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களுடைய நட்பைப் பெறுவீர்கள், வீட்டிலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு,

**ரிஷபம்** ஆயுத பீடைக்கு இடமுண்டு எனவே எதிலும் அவதானம் விரும்பத்தக்கது. அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கலாம். தெய்வ நம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்.

**மிதுனம்**- கனிவான சம்பவங்கள் நடைபெறும், காதலர்களுக்கு கன குஷியான தினம். தாம்பத்திய வாழ்க்கையில் பிணைப்புக்கள் மேலும் பலப்படுத்தப்படும். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

**கடகம்**- நண்பர்களே உங்கள் முன்னேற்றத்துக்கு தடைக்கல்லாக அமைவார்கள். மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும். தொழில் துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

**சிம்மம்** உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும். தெய்வவழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும், கால்நடைகள் விருத்திக்கும்இடமேற்பட முடியும்.

**கன்னி**- பணம் தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு அதிர்ட்ட தேவதையின் அணைப்பும் உண்டு: கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரியின்நம்பிக்கையைப் பெறுவீர்கள், உற்சாகமான தினம்.

**துலாம்**- புதிய தொழில்மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியால் முன்னேற்றமும் உண்டு.

**விருச்சிகம்**- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம். விளைபொருள்களினால் பணம் விரயமாகலாம். அதிகக் கட்டுப்பாடு அவசியம் தேவை.

**தனுசு**- அரசியல்வாதிகளுக்கு இன்று அடி சறுக்கலாம். நான் என்ற அகம்பாவத்தை அடக்கிக் கொள்ளவும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழி அமைக்கும்.

**மகரம்**- சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர். சொகுசான வாழ்வும் கிடைக்கும். பிறருடைய மதிப்புக்கும் இலக்காவீர்கள். வரவேற்க வேண்டிய தினம்.

**கும்பம்**- ஆசாரக் குறைவுக்கும் அவசரப்போக்குக்கும் இடமுண்டு. இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். பூமிப் பிணக்கினால் வழக்கு விவகாரத்துக்கும் இடமேற்படும்,

**மீனம்**- இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும நல்ல அபிவிருத்தி தென்படுகின்றது. ஆசிரியர்களுக்கு செல்வாக்குப் பெருக இடமுண்டு.





அதன் காரணங்கள—

(அ) 'ரவி' முடி உயர்தரமான சீன முடி. அவை உலகிலேயே சிறந்தவை. உயர்ந்த ரக பிரஷ் தயாரிப்பாளர்கள் இதனையே பாவிக்கின்றனர்.

(ஆ) இம்முடிகள் பற்றிய இரண்டாம் குறிப்பு: ரவி பிரஷ்களில் அதிக முடிகளை அடக்கியுள்ளோம். வெறும் வேடிக்கைக்காக அல்ல. பி நெருக்கமான முடிகள் உள்ள பிரஷ் அதிக அளவு வர்ணத்தை உள்ளடக்குவதால் வர்ணம் விரைவாகவும், மிருதுவாகவும் பரவுகின்றது.

(இ) 'ரவியின்' தகடுகள் உருக்காலாக்கி நிக்கல் பூசப்பெற்றவை. முடிகளை உறுதியாகப் பற்றிக்கொள்பவை, இக்காரணத்தினால் சுவர்களில் 'ரவியினால்' வர்ணம் திட்டும் பொழுதும் வேறு வர்ண வேலைகள் செய்யும்பொழுதும் கழன்ற முடிகளையோ அல்லது கீற்றின் அடையாளங்களையோ காண்பதில்லை.

(ஈ) 'ரவியின்' கைப்பிடி பலம் வாய்ந்தது. நல்லுருவம் அமைந்தது. அத்துடன் அதன் தரம் ஒரு காலும் குறையாதது. இவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துக் கூறினால் 'ரவி' உங்களுக்குப் பொருள் ஈட்டுகின்றது. வேறு விதமாகக் கூறினால் வர்ணம் திட்டும் வேலையைக் குறைந்த செலவில் செய்ய உதவுகின்றது

ஆகவே "ரவியை" கேட்டு வாங்குங்கள்
ரவி

017-69-MASTERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாத்காரத்தை கைவிடுவது பற்றி

# மாஸ்கோ பேச்சுவார்த்தை: மேற்கு ஜெர்மன் திருப்தி

மாஸ்கோ, டிச. 6

ரஷ்யாவுடன் நடந்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை குறித்து மேற்கு ஜெர்மனி திருப்தி தெரிவித்துள்ளது.

பலாத்காரத்தைக் கைவிடுவது தொடர்பாக, இங்கு சோவியத் வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையில் இரு நாடுகளுக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக மேற்கு ஜெர்மனி கூறுகிறது.

பலாத்காரத்தைக் கைவிடுவதற்கு ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை சுமுகமான சூழ்நிலையில் நடைபெறுகின்றது.

பேச்சுவார்த்தைகளில் மேற்கு ஜெர்மனித் தூதுகோஷ்டிக்கு மாஸ்கோவில் உள்ள அயல்நாட்டுத் தூதர் திரு. ஹெல்மட் அலார்ட் தலைமைவகித்தார்.

ரஷ்யா-மேற்கு ஜெர்மன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் பொருட்டுப் பிரதமர் கீஸிங்கர் மாஸ்கோ வருவாரெனப் போன் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்

## அமெரிக்காவின்

# வியட்னும் கொள்கைக்கு தொடர்ந்து ஆதரவு

### பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் தீர்மானம்

லண்டன் டிச 9

அமெரிக்காவின் வியட்னும் கொள்கைக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதெனப் பிரிட்டிஷ் ஆட்சி மன்றம் நேற்று தீர்மானித்தது.

கடந்த இரு நாட்களாக நடந்துவந்த சூடான விவாதத்தின்பின்னர் 139 அதிகப்படியான வாக்குகளால் அமெரிக்காவின் வியட்னும் கொள்கையில் பழைய நிலையைத்தான் கடைப்பிடிப்போம் என்பதை வில்சன் ஆட்சி உறுதிப்படுத்தியது.

தொழிற்கட்சியைச் சேர்ந்த 50 பேர் விரோதமாக வாககளிததனர். 40 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை

'அமெரிக்காவின் வியட்னும் கொள்கைக்கு ஆதரவு அளிப்பதில் மாற்றமிருக்க

### 'மாறுதல்களுக்கு ஆயத்தமாகிறது'

—இந்திரா

புதுடில்லி, டிச 9

'பாரதம் பெரும் மாறுதல்களுக்கு ஆயத்தமாகிவருகிறது. ஆகையால் சமூக பொருளாதார பிரச்னைகளில் சகலரும் ஒத்துழைக்க வேண்டும்''

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்றிரவு புதுடில்லியி நடந்த வர்த்தகர்சங்க கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு உரை நிகழ்த்தினர்.

றிசர்வ் வங்கி கவர்னர் திரு. ஷாவும் உரைநிகழ்த்தினர்.

### பதவி உயர்வு

பருத்தித்துறை, செவ்.

...வாலி ஆசிரியர் பயிற்சிக்

### பழைய தலைவர்களுக்கு அழைப்பு

புதுடில்லி டிச 9

'கிருபாளினி போன்ற பழைய தலைவர்கள் எம்முடன் காங்கிரஸில் சேர வேண்டும்' என்று நிஜலிங்கப்பா குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

காங்கிரஸிலிருந்து விலகிய பழைய தலைவர்கள் சிலரை தம்முடன் சேர்த்து பலப்படுத்துவதென்றும் நிஜலிங்கப்பா குழு தீர்மானித்துள்ளது.

...

### மாணவர்கள் மீதான அன்பு மாருது

சென்னை, டிச. 9

''மாணவர்கள் கொடும்பாவி எரித்தாலும், 'ஒழிக' கோஷமிட்டாலும் அவர்கள் மீதான என் அன்பு என்றும் மாருது.''

சென்னை அரசாங்க கலைக்

### 'மந்திரிப்பதவியை வேண்டாம் என்று நான் கூறவில்லை'

#### சுப்பிரமணியம் கூறுகிறார்

திருச்சி, டிச. 9

'மந்திரிப் பதவி மூலமும் சேவை செய்யமுடியும் என்று நான் நினைக்கின்றேன் மந்திரிப் பதவியை நான் வேண்டாமென்று சொல்லவில்லை' என்று ஆளும் காங்கிரஸ்கட்சியின் இடைக்காலத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் கூறினர்.

நிருபர்கள் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:-

'நான் இந்தியமந்திரிசபையில் அங்கம் வகிக்கவேண்டுமானுல், முதலில் ஆட்சிமன்ற உறுப்பினராகவேண்டும், மந்திரிப் பதவி மூலம் மக்களுக்குச் சேவைசெய்ய விரும்புகிறேன். மத்திய பிரதேசத்தில் ஒரு தொகுதியில் இடைத்தேர்தலிலோ டில்லி சட்டசபைக்குப் போட்டியிடவிருப்பது ஒரு உத்தேசம்தான் இறுதிமுடிவு பிறகுதான் தெரியும்'

### 'சீர்திருத்த வாதிகளாகவும் ஆசிரியர் திகழ வேண்டும்'

மாவிட்டபுரம், செவ்வாய்

''ஆசிரியர்கள் படிப்பிப்பதோடு மட்டுமல்லாமல் சமூக சீர்திருத்த வாதிகளாகவும் திகழ்ந்தால்தான் எதிர்காலச் சமுதாயமாக திகழப்போகும் மாணவர்களின் சமூகம் சிறந்தமுறையில் அமையும். இதை உணர்ந்து சமுதாய முன்னேற்றத்துக்கு சேவைசெய்பவர்களிலே திரு. தம்பிஐயாவும் ஒருவர்.

இவ்வாறு வலிகாமம் வடக்கு தமிழாசிரியர் சங்க உறுப்பினராக விருந்தும் ஆசிரியராகவிருந்தும் ஓய்வுபெறும் திரு. தம்பிஐயாவுக்கு அளிக்கப்பட்டபிரிவுசார விழாவில் கலந்துரையாற்றிய வலி-வடக்கு தமிழாசிரியர் சங்க தலைவர் திரு. வே. கந்தையா கூறினர்.

...லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த 37 வருடங்களாக ஆசிரியர் சேவையில் ஈடுபட்டு வந்த இவர் வலி-வடக்கு தமிழாசிரியர் சங்க உறுப்பினராக இருந்து பல ஆண்டுகள் சேவை புரிந்தார். இவர்இச்சங்கத்துக்கு செய்த சேவை அளப்பரியது. திரு. தம்பிஐயாவின் சேவை மனப்பான்மை பொறுமை அடக்கம்ஆகிய குணங்களைப்பற்றியும் அவர் பாராட்டிப் பேசினுர்.

மற்றும் திரு. ஜே. தேவசகாயம் பண்டிதர் நாகலிங்கம் எஸ். சின்னத்தம்பி ச. சச்சிதானந்தம், தி. க. கதிர்காமத்தம்பி ஆகியோரும் பாராட்டுரை வழங்கினுர்கள். திரு வே. ...சின்னையா நன்றி கூறினு...

# பொலிஸாரிடமிருந்து ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏதென்ஸில் நடந்த கோரவிபத்து

# விமானம் நொறுங்கியது: 90 பேரும் மாண்டனர்

லண்டன் டிச 9

கிரேக்க பிரயாணிகள் விமானமொன்று 90 பேருடன் நேற்றிரவு ஏதென்ஸுக்கு அருகே விழுந்து நொருங்கியது. விமானத்திலிருந்த 90 பேரும் மாண்டனர்.

ஏதென்ஸ் மலையுச்சியில் 'ரூடர்' நிலையத்துக்கு அருகில் நடந்த இந்த பயங்கர விபத்து திடீர் மின்னல் தாக்குதலால் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விழுந்து நொறுங்கிய விமானம் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்த சமயம் மாணடவர்கள் சடலங்கள் சின்னுபின்னமாகவும், சிதைந்தும் விமானத்தைச் சுற்றிச் சிதறிக் கிடந்தன.

விபத்து நடந்த சமயம் கொட்டும் மழையும், இடியும், மின்னலுமாக இருந்ததால் மீட்பு விமானங்கள் உடன் உதவிக்குச் செல்ல முடியாது போய்விட்டது.

இந்த விமானத்தில் பயணம் செய்த 90 பேரில் 85 பேர் பிரயாணிகள். ஐவர் விமான சிப்பந்திகள்.

# தோட்டப் பகுதியில் குடும்பத் திட்டம்

### தீவிர ஆர்வம் காட்டப்படுகிறதாம்

கோட்டை, செவ்வாய்

கருத்தடை சாதனங்களை பாவிக்கும் தோட்டப் பகுதி மக்களின் எண்ணிக்கை 1968-69ம் ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனுல் 1968-ல் ஒவ்வொரு ஆயிரம் உயிர்ப் பிரசவங்களுக்கும் 27 4 சதவிகிதமாக, பிறப்பு விகிதம் தோட்டப் பகுதிகளில் வீழ்ச்சிஅடைந்துள்ளது.

இலங்கைத் தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் தோட்டப் பகுதி சௌக்கியத்திட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எல். வி. ஆர். பெர்ணுன்டோ விடுத்துள்ள 1968-69ம் ஆண்டுக்கான அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தோட்டப் பகுதிகளில் கடமையாற்றும் 245 அப்போதிக்கரிமார்களுக்கும், 49 மருத்துவ மாதர்களுக்கும் குடும்பத்திட்டப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதாகவும், கருத்தடை வில்லைகளைப் பாவிப்போரின் தொகை நாள்தோறும் அதிகரித்து வருவதாகவும், மொத்தம் 60ஆண்கள் தோட்டப்பகுதிகளில் கருத்தடை சத்திர சிகிச்சை செய்துள்ளனரென்றும் கருத்தடை சத்திர சிகிச்சை செய்துகொள்ளும் பெண்கள்தொகை ஆண்களை விட அதிகமென்றும், குடும்பத்திட்ட முறைகளில் தோட்டப்பகுதி தொழிலாளர்கள் தற்சமயம் பெரும் ஆர்வங்காட்டி வருவதால், இதுசம்பந்தமான கிளினிக்குகளை ஆங்காங்கே விரிவுபடுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் டாக்டர் பெர்ணுன்டோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி, செவ்

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர் திரு. ஏ. பேரம்பலம் போக்கறப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார். போக்கறப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. பொன்னையா கிளிநொச்சி கனகபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

அல்லைப்பிட்டி. செவ்

வேலணைக் கிராமசபையில் கடந்த நான்கு வருடங்களாக கடமையாற்றிய லிகிதர் திரு. கே. சிவசுப்பிரமணியம் அடுத்த மாதம் தொடக்கம் மல்லாகம் கிராமசபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவரது இடத்திற்குப் புங்குடுதீவுக்

### "பாடசாலைகளின் கல்வித் தரம் குன்றிவிட்டது"

இமையானன், செவ்.

''பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்பு கல்வியின் தரம் மிகவும் குன்றி விட்டது. தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் இருந்த காலத்தின் கல்வியறிவிலும் பார்க்க இக்கால கல்வியறிவு மிகவும் பின் நோக்கிச் செல்கின்றது''

இவ்வாறு உடுப்பிட்டி திருச்சபையின் ஆதரவில் நடைபெறும் சிறுவர் பாடசாலையின் முதலாவது ஆண்டு விழாவின் போது சபைக் காரியதரிசி திரு. வி. எஸ். சி. இரத்தினசிங்...

...லேயே சிறந்த கல்வியறிவை ஊட்டுவதுடன் அவர்களை நல்ல வழியில் செல்லவைக்க வேண்டியதும் பெற்ருர்களுடைய கடமையாகும். அப்படி அவர்களை நல்வழியில் புகுத்துவதற்கு சிறுவர் பாடசாலைகள் பெரிதும் உதவி செய்கிறது. நல்வழியில் செல்ல உதவுவதுடன் ஒவ்வொருவரின் குணத்தையும், போக்கையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற வழியில் புகுத்துவதற்கும் சிறுவர் பாடசாலைகள் பயன்படும். இப்படியான சிறுவர் பாடசாலைகளுக்கு பெற்...

ந்த 50 பேர் விரோதமாக வாக்களித்தனர். 40 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை

'அமெரிக்காவின் வியட்னாம் கொள்கைக்கு ஆதரவு அளிப்பதில் மாற்றமிருக்க மாட்டாது தொடர்ந்து எமது ஆதரவை வழங்கிக் கொண்டிருப்போம்' என்று பிரதமர் திரு. வில்சன் உறுதியாகக் கூறினர்.

## விசாரணை செய்யவும்

கோட்டை, செவ். 'எமது நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் கொலையும் காடைத்தனமான செயல்களும் இடம்பெறுகின்றன' இவ்வாறு இலங்கை சிறைச்சாலை சீர்திருத்த சங்கத்தின் செயலாளரான டாக்டர் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். இச்சிறைச்சாலைகளில் நிலவும் நிலைமைகளை விசாரணை செய்ய வேண்டுமெனமனித உரிமை ஆணைக் குழுவின் முன்னைய தலைவர் சேனரத் குணவர்த்தன உட்பட பல பிரமுகர்கள் கோரியுள்ளனர்.

திரு. ஷாவும் உரைநிகழ்த்தினர்.

## பதவி உயர்வு

பருத்தித்துறை, செவ். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு. கே. சிவநாதன் ஆசிரியர் கடமைகாலப் பயிற்சிகளுக்குப் பொறுப்பான கல்வி அதிபராகப் பதவி உயர்வுபெற்று கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## பழுதடைந்த கம்பங்களால் ஆபத்து

பருத்தித்துறை, செவ். பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள மின்சாரக் கம்பங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளன. இவை எந்நேரமும் மழையுடன் சேர்ந்து வரும் புயலுக்கு, அண்மையிலுள்ள வீடுகளில் சரிந்து விழக்கூடிய நிலையிலிருக்கின்றன. இந்நிலைமை பற்றி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

## அன்பு மாறாது

சென்னை, டிச. 9 ''மாணவர்கள் கொடும்பாவி எரித்தாலும், 'ஒழிக' கோஷமிட்டாலும் அவர்கள் மீதான என் அன்பு என்றும் மாறாது.''

சென்னை அரசாங்க கலைக் கல்லூரியைத் திறந்து வைத்து தமிழக முதலமைச்சர் திரு. மு கருணாநிதி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: நாங்கள் மாணவர்களுடன் இன்று, நேற்றல்ல எவ்வளவோ காலமாகத் தொடர்பு வைத்திருக்கிறோம். மாணவர்களுக்கு எங்கள் இதயத்தில் தனி இடத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். மாணவர்களுக்கு ஓர் இன்னல் ஏற்பட்டால் துடிதுடித்துப் போய்விடுகிறோம் என்று கூறினர்.

ஊர்காவற்றுறை, செவ். பெருந்தொகையான மக்கள் வாழும் புங்குடுதீவு நாலாம் வட்டாரத்தில் உபதபாற்கந்தோர் ஒன்றை நிறுவ வேண்டுமென தபால் அதிபரையும் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் கேட்டுள்ளது.

# வல்வையில் களவுபோன வலைகள் நாகபட்டினத்தில் இருந்தன

கோப்பாய, செவ். கடந்த அக்டோபர் மாத பிற்பகுதியில் வல்வெட்டித்துறை கடற்கரையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாகப் புகார் செய்யப்பட்ட ரூபா 19,000 பெறுமதியான வலைகளில் 6 சாக்கு வலைகள் இரு தினங்களுக்கு முன்பு நாகபட்டினத்திலுள்ள வேளாங்கன்னி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மயிலிட்டியைச் சேர்ந்த கருணகடாட்சக் குருவுக்குச் சொந்தமான வள்ளம் ஒன்றும், ரூபா 19,000 பெறுமதியான வலைகளும் கடந்த அக்டோபர் மாதப் பிற்பகுதியில் வல்வெட்டித்துறைக் கடற்கரையிலிருந்து காவலாளியுடன் ஏமாற்றிக் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து திருச்சினப்பள்ளி உதவி சுங்க இலகா மேலதிகாரிகளால் நடாத்தப்பட்ட விசாரணைகளையடுத்து கடற்றொழிலாளர் ஆலோசகரும் கோப்பாய்க் கிராமசபைத் தலைவருமாகிய திரு. தி பரமானந்தராசாவினுல் நேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினுலும் சுங்க இலாகாப் பகுதியினரது தேடுதலினுலும் 6 சாக்கு வலைகள் நாகபட்டினத்திலுள்ள வேளாங்கன்னி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

குறித்த வள்ளமும் வலைகளும் நாகபட்டினம் சுங்க இலாகாப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் அவை இலங்கைக்குக் கொண்டுவரப்படும்.

## 'கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் இவர்களுக்கு முதலிடம் அளிக்கவும்'

உடுப்பிட்டி, செவ். 'ஜீ. சீ. ஈ. உயர்தர) வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்குக் கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் முதலிடம் கொடுக்க வேண்டும்' என்று கோரும் மகஜர் ஒன்றை வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கச் செயலாளர் திரு. சு. தேவச்சந்திரன் உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

அம் மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது: ''ஜீ. சி. ஈ. (வர்த்தகம்) உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் தற்போதுள்ள நிலையில் எந்தப் பல்கலைக் கழகத்திலும் உயர்கல்வி பெற முடியாத நிலைக்குள்ளாகி அவதிப்பட்டு வருகின்றார்கள்.

கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் இப்போது வர்த்தகக் கல்வி சம்பந்தமாக உயர் கல்வி பெறும் வாய்ப்பிருந்தும் கலைப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் போட்டியினுல் வர்த்தக பிரிவு மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

கலைப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் வர்த்தக பிரிவு மாணவர்களுடைய இடத்தைத் தட்டிக் கொள்ளப் போகிறார்கள். இத்தகைய நிலையில் வர்த்தக மாணவர் உயர்கல்வியைப் பெறுவது இயலாத ஒரு காரியமாக உள்ளது.'

லாகம் அமெரிக்க னையா நன்றி கூறினர்

# பொலிஸாரிடமிருந்து தப்ப முயன்ருராம்

## குற்றச்சாட்டு இரட்டிப்பானது

பருத்தித்துறை, செவ். பருத்தித்துறையைச் சேர்ந்த பாலகிருஷ்ணசாமி என்பவரை புலோலி கிழக்கைச் சேர்ந்த எம். யோகசம்பந்தன் என்பவர் வாளால் வெட்ட எத்தனித்ததாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் நவரத்தினம் யோகசம்பந்தன் என்பவரைக் கைதுசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்த அழைத்துச்செல்கையில் அவரிடமிருந்து தப்பிச்செல்ல எத்தனித்தாராம்.

தப்பியோட முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் யாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 1500 பிணையில் செல்லுமாறும் வாளால் வெட்ட எத்தனித்த வழக்கில் ரூபா 700 பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டு மேல் விசாரணையை இம் 28-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## உல்லாச பிரயாண நிலையங்கள்

கோட்டை, செவ்வாய் இலங்கையின் 9 வெந்நீர் ஊற்றுக்களுக்கும்அருகாமையில் 9 உல்லாசப் பிரயாண நிலையங்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் தொல் பொருளாராய்ச்சி இலாகாவினுல் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 8 புதிய வெந்நீர் ஊற்றுக் கிணறுகளும் மற்ற புகழ்பெற்ற கிண்ணியா வெந்நீர் ஊற்று ஆகியவையே மேலே குறிப்பிட்ட 9 வெந்நீர் ஊற்றுக்களுமாகும்.

இலங்கையின் தெற்கு, கிழக்கு கரையோரங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்புதிய 8 வெந்நீரூற்றுக்களாலும் இக்கரையோரப் பகுதிகளிலுள்ளகிராமங்கள் உல்லாசப்பிரயாண கிராமங்கள் ஆகப்போகின்றன.

## விநாயகர் சஷ்டி

கோப்பாய், செவ் விநாயகர் சஷ்டியை முன்னிட்டு எதிர்வரும் 14ம் திகதி கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பெருங்கதைப் படிப்பும் உற்சவமும் நடைபெறவுள்ளன.

## தீவுப்பகுதி முன்னேற்றம்

ஊர்காவற்றுறை, செவ் தீவுப்பகுதி முன்னேற்றக் கழகத்தின் ஓர் ஆலோசனைக் கூட்டம் வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

நடைபெற்ற கருத்தரங்கத்தின்போது திரு. பி.கதிரவேலு சிறுபான்மைத் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக சேரிஒழிப்பு, கல்வி வேலைவாய்ப்பு விஷயங்களில் கவனம் செலுத்துவேன் எனக் குறிப்பிட்டுப் பேசினர். சர்வோதயக் கருத்துக்களைத்தான் மேற்கொண்டு பணிபுரியவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு. ந. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இருபது அங்கத்தவர்கள் தீவுப்பகுதி முன்னேற்றக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

## "புதியசேவை ஆரம்பிக்கவும்"

சுழிபுரம், செவ் மூளாயிலிருந்து சுழிபுரம் பாதைவழியாக, பருத்தித்துறை, கீரிமலை, ஆகியஇடங்களுக்கு தினமும் பஸ் சேவை நடாத்துவதுபோல் இ.போ. சபையினர் மூளாயிலிருந்து சங்கானை, கந்தரோடை, சுன்னுகம் வழியாக சாவகச்சேரிவரை ஒரு சேவையை நடாத்த ஏற்பாடுகள் செய்யும்படி சுழிபுரம் கிராமசபை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் மூலம் வேண்டியுள்ளனர்.

இப்புதியசேவை ஆரம்பிப்பதன் மூலம் மூளாய், சுழிபுரம், தொல்புரம், சித்தன்கேணிப் பகுதி மக்கள் அடையும் நன்மைகள் மகஜரிய் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## திருவாசக விழா

சுழிபுரம், செவ். வழக்கம்பரை பஜனைச் சபையினரால் திருவாசக விழா வரும் பத்தொன்பதாம் திகதி மாலை வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடாத்தப்படவிருக்கிறது.

களாக கடமையாற்றிய லிகிதர் திரு. கே. சிவசுப்பிரமணியம் அடுத்த மாதம் தொடக்கம் மல்லாகம் கிராமசபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவரது இடத்திற்குப் புங்குடுதீவுக் கிராமசபையில் லிகிதராகக் கடமையாற்றும் திரு. எஸ். சரவணமுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

ஊரைதீவு, செவ்வாய் புங்குடுதீவு கிராமசபையில் இரண்டு வருடங்களாக பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றிய திரு. சு சரவணமுத்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் வேலணை கிராம சபையில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஸ்தாபகர்தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், செவ். இராமனுதன் கல்லூரி ஸ்தாபகர் தினவிழாவும்பரிசளிப்புவிழாவும் இம்மாதம் 13-ம் திகதி மேற்படி கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

உடுவில் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற விருக்கும் இவ்விழாவில் பருத்தித்துறை மாவட்ட நீதவான் சி. எம். தர்மலிங்கமும் நியாயதுரந்தரர் திரு. எஸ். ஆர். கனகநாயகமும் சிறப்புச் சொற்பொழிவாற்ற விருக்கின்றனர்.

## வெளியேறினர்

பச்சிலைப்பள்ளி, செவ் பச்சிலைப்பள்ளிபகுதியைசேர்ந்த போக்கறுப்பு சுண்டிக்குளம் பகுதிக் கடற்கரை ஓரங்களில் அரசாங்க அனுமதியின்றி அடாத்தாகத் தென்னை பயிரிட்டோர் பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரியின் உத்தரவின்பேரில் வேலிகளைப் பிரித்ததுடன் தாம் நாட்டிய தென்னங் கன்றுகளையும் அப்புறப்படுத்தியுள்ளனர்.

## மணிவாசகர் விழா

கோப்பாய், செவ்வாய் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வரும் திருவெம்பாவைத் தினங்களில் மணிவாசகர்விழா சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.

தினமும் அதிகாலை 5 மணிக்கு இவ்வுற்சவம் நடைபெறும். மாலையில் வீதி பஜனையும் மணிவாசகர் ஊர்வலமும், கதாப்பிரசங்கமும் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் ஆதீன அதிபர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு உடுப்பிட்டி திருச்சபையின் ஆதரவில் நடைபெறும் சிறுவர் பாடசாலையின் முதலாவது ஆண்டு விழாவின் போது சபைக் காரியதரிசி திரு. வி. எஸ். சி. இரத்தினசிங்கம் கூறினர்.

வணக்கத்துக்குரிய டி.ஜே அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவின் போது அவர் மேலும் கூறியதாவது: 'எந்த ஒரு காரியத்திற்கும் ஆரம்பமும் அத்திவாரமும் சிறந்தமுறையிலும் பலமாகவும் அமைய வேண்டும். அப்பொழுது தான் அவை தொடர்ந்தும் சிறப்பாக வளர முடியும். அதேபோல் எதிர் காலப் பிரஜைகளாக வரும் சிறுவர்களுக்கு ஆரம்பத்தி

ஒவ்வொருவரின் குணத்தையும், போக்கையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற வழியில் புகுத்துவதற்கும் சிறுவர் பாடசாலைகள் பயன்படும். இப்படியான சிறுவர் பாடசாலைகளுக்கு பெற்ருேர்கள் முழு ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபரான திரு. எஸ். எஸ். செல்லத்துரை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் செல்விமான் உட்பட பலர் கலந்து கொண்ட இவ்விழாவில் சிறுவர்களின் நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருமதி இராசம்மா செல்லத்துரை சிறுவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

# 'எதிர்கால சந்ததியினர் தலைநிமிர்ந்து வாழவேண்டும்'

மட்டுவில், செவ். ''எமது தமிழ் இனத்தின் மொழி, கலை, கலாசாரம் போன்ற உரிமைகளை, பூரண சுதந்திரத்துடன் இந்த நாட்டில் நாம் அனுசரிக்க வேண்டும். எமது எதிர்கால சந்ததியினர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற உயர்ந்த பண்புடன் தலை நிமிர்ந்து சுதந்திரமாக இந்த நாட்டில் வாழ வேண்டும். எமது உரிமைகளைப் பெறுவதுதான் எமது அரசியல் இலட்சியமே தவிர, ஒரு சிறு சலுகைகளுக்காக கையேந்திப் பிச்சை கேட்பதோ, அதிகார பீடத்துடன் ஒட்டியிருந்து அடிவருடுவதோ எமது அரசியல் கொள்கை அல்ல, இப்படியான சலுகைகளைப் பெறுவதுதான் தமிழரின் அரசியல் நிலை என்ற இழிவு மனப்பான்மை, எமது எதிர்கால சமுதாயத்திற்கு ஏற்படக் கூடாது. எமது எதிர்கால சந்ததியினரை கடமை வீரர்களாகவும் உரிமைகளுக்காகப் போராடும் சிறந்த தியாகிகளாகவும் அரசியல் வரலாற்றிலேயே முக்கிய இடம் வகிக்கக் கூடியவர்களாகவும் ஆக்க வேண்டிய முக்கிய பொறுப்பு எமது தாய்க் குலத்தையே சாரும்''

இவ்வாறு மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாசாலை புதுக் கட்டிட அடிக்கல்நாட்டு விழாவில் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினர்.

திரு. நா. கந்தையா தலைமை தாங்கிய இந்த விழாவில் சுமார் 20,000 ரூபா செலவில் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாசாலைக்கான புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து தனது உரையிற் கூறியதாவது:

'எமது தமிழினத்தைப் பொறுத்த வரையில் மகாவலி கங்கையை தெற்கேயிருந்து, வடக்கே திருப்புவதிலோ இலங்கையிலுள்ள குளங்களையெல்லாம் வெட்டி களனிகளாக்குவதிலே இங்குள்ள வீதிகளையெல்லாம் திருத்தி தாருக்குப் பதிலாக தங்கத்தை உருக்கி வார்ப்பதிலோ எமது அர்சியல் உரிமைகள் கிடைத்துவிடப் போவதில்லை. இவைகள் எல்லாம் ஆட்சியாளருடன் ஒட்டிக்கொண்டிருந்து, அடிவருடுவதினுல் கிடைக்கும் சிறு சிறு சலுகைகளேயாகும்.

ஒரு நாட்டின்வரலாற்றை உணர்த்துவது அந்த நாட்டின்இலக்கியம் அந்தநாட்டு மக்களின் வீரம் அரசியல் உரிமைகள் போன்றனவே. எமது தமிழினத்தின் வரலாற்றை, வெறும் கர்ணபரம்பரைக் கதைகளிலே மட்டுமல்ல ஏடுகளிலே, இலக்கியத்திலே நூல்களிலே கல்வெட்டுகளிலே ஓலைகளிலே செப்பேடுகளிலே நாணயங்களிலே காணக் கூடியதாகவிருக்கிறது.

இப்படியான வரலாற்றுப் பெருமை கொண்ட எமது இனம் இன்று வயிற்றுப் பிழைப்பை மட்டும் மையமாகக் கொண்டு வெறும் சலுகைகளுக்கு கையேந்துவதுதான் தமது அரசியல் என்று எண்ணுவது வருந்தத்தக்கது.எமது இனத்தின் உரிமைகளைப் பெற்று அரசியல் துறையிலேயும், கலை கலாச்சாரத்திலேயும் தலை நிமிர்ந்து நாமும் எமது எதிர்கால சந்ததியும் வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் வகுக்கும் திட்டங்களை இறைவன் மாற்றி விடுகிறான். ஆனால் சத்திய வேட்கையை இறுதி லட்சியமாகக்கொண்டால் மனிதனின் திட்டங்கள் தோல்வியுற நேர்ந்தாலும் அதனால் ஒடுவருக்கும் ஒரு கெடுதலும் நேராது. எதிர்பார்ப்பதைவிட சிறந்த பலன் கிடைக்கும்.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 25-ந் திகதி (10-12-69)


## மனித உரிமைகள் தினம்

மனித உரிமைகள் தினம் இன்று இலங்கைஉட்பட உலக நாடுகள் பலவற்றிலும் கொண்டாடப்படுகிறது. சர்வதேச மனித உரிமைகள் சாஸனம் பிரகடனப் படுத்தப்பட்டு இன்றுடன் இருபத்தொரு ஆண்டுகளாகின்றன. இத் தினத்தையொட்டி கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா விடுத்துள்ள ஒரு செய்தியில் மனித உரிமைகள் சாசனத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இலட்சியங்களைச்செயற்படுத்துவதற்கு கடந்த சில வருடங்களில் ஐ.நா. ஸ்தாபனம் தொடர்ந்து பெரு முயற்சி செய்து வந்திருக்கிறதென்றும், எங்கு குடியுரிமை, அரசியல் உரிமை மீறப்படுகிறதோ அங்கு அவற்றை சீராக்கிஒவ்வொருவரும்சமூக பொருளாதார கலாச் சார உரிமைகளைச் சமமாகஅனுபவிக்கக்கூடிய ஒரு நிலையை வருங்காலத்திலும் ஐ. நா. ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டு இருபத்தோராண்டுகளாகி விட்டபோதிலும் உலகில் இன்னும்பல இடங்களில் அடிப்படைச் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் அனுபவிக்க முடியாத நிலை இருப்பது குறித்து கவர்னர் ஜெனரல் தமது செய்தியில் கவலையும் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச மனித உரிமைகள் சாஸனத்தை இலங்கையும் மற்றும்பல நாடுகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன ஆனாலும் உலக நாடுகள் யாவற்றிலும் அவை சிறிய நாடுகளாக இருப்பினும் சரி பெரிய நாடுகளாக இருப்பினும் சரி அந்த சாஸனத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அத்தனை நோக்கங்களையும் சரியாகச் செயல்படுத்துகின்றன வென்றோஎந்த ஒரு நாட்டிலும் மனித உரிமைகள் மீறப்படவில்லையென்றோ துணிந்து சொல்ல முடியாது. பலநாடுகளிலும் இன,மத பிரதேச வேறுபாடுகளும், சச்சரவுகளும் அடிக்கடியேற்படுகின்றன. நமது நாட்டில் கூட மொழி இன,சாதிவேறுபாடுகள் இருக்கின்றன. ஒருவரின் உரிமைகளை மற்றவர் மறுப்பதாகவும் ஒரு சமூகத்துக்கு எதிராகவோ, ஒரு பிரிவினருக் கெதிராகவோ பாகுபாடு காட்டப்படுவதாகவும் புகார்கூறப்படாதநாளே இல்லையெனலாம்.

கடந்த இருபத்தியோராண்டுகளில் மனித உரிமைகளுக்கு முரணான சில சட்டங்களும் நமது நாட்டிலும்கூட நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஐ. நா. பிரகடனப்படுத்திய மனித உரிமைகளை பூரணமாகச் செயல் படுத்துவது என்று ஒவ்வொருவரும் இன்றைய தினத்தில் சங்கற்பம் செய்துகொள்வதுதான் மனித உரிமைகளைப் பாது காப்பதற்குச் சரியான வழியாகும் என்று கவர்னர் ஜெனரல் தமது செய்தியில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நமது நாட்டைப் பொறுத்தவரையில் மற்றொரு கடமையுமிருக்கிறது. அதாவது நமது அரசியல் அமைப்பில் ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தையும் இணைத்துக் கொள்வதுதான் அது.

பல நாடுகள் தமது அரசியல் அமைப்பில் இவ்விதம் மனித உரிமைகள் பிரகடனத்தைச் சேர்த்துள்ளன. இதன் மூலம்மனித உரிமைகளுக்கு முரணான சட்டங்கள் கொண்டுவருவதைத் தடுக்கவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் வாய்ப்பேற்படும்.

## வியட்நாமுக்கு விடிவு

### ஒருகண்ணோட்டம்:

# தமிழன்னைக்கு ஒரு 'சங்கிலியம்'

ஈழத்தமிழ் இலக்கிய உலகில் ஏற்றமிகு சிறுகதைகள் ஏராளமாகத் தோன்றியுள்ளன; கற்பனைத் திறனும், கருத்தாழமும், கவிதைச் சிறப்பும் மேம்பட்டு விளங்கும் ஈடு இணையற்ற கவிதைகள் கணக்கின்றித் தோன்றியுள்ளன; மனித வாழ்க்கையின்தொடர்பான பல சம்பவங்களைத் தொட்டு நிற்கும் நல்ல நவீனங்களும் ஓரளவிற்குத் தோன்றியுள்ளன, ஆனாலும் ஐம்பெரும் காவியங்களைப் படைத்து அணிசெய்யப்பட்ட தமிழ்த் தாய்க்குஈழத்தமிழ்க்கவிஞர்கள் ஒரு காவிய மணியாரத்தைத்தானும் சூட்டாதது பெருங்குறையாகவே இருந்துவந்தது.

ஈழவளநாட்டில் தரமான ஒரு தமிழ்க் காவியம் இல்லையே என்ற குறை எத்தனையோ கவிஞர்களினதும், அறிஞர்களினதும், உள்ளங்களைக்குடைந்து கொண்டேயிருந்தது. இருந்தும் இக்குறை தீர்வதற்கேற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள் தோன்றவேயில்லை,

காவியம் படைப்பதென்பது எளிதான காரியமல்ல. பண்டைத் தமிழ் இலக்கண நூலார்கூறும் காவிய இலக்கணத்திற்கேற்ப ஒரு காவியத்தைப் படைப்பதாயிருந்தால் அதற்கு எத்தனையோ மாதங்கள் பெரு முயற்சி செய்யவேண்டும்.

மாதக்கணக்காகப் பெரு முயற்சி செய்து காவியம் படைக்கும் பொறுமையும், அதற்கேற்ற சூழ்நிலை வசதியும் இன்றைய உலகில் இடைப்பது அருமையிலும் அருமை. பண்டைக்காலத்தில் கவிதையைத் தொழிலாகக்கொண்ட பெரும் புலவர்கள் பலரிருந்தனர். அப்புலவர்களை ஆதரித்து அவர்களுடைய வாழ்வைச் செவ்வனே நடாத்துவதற்குப் பொன்னும் பொருளும் வழங்கவள்ளல்களும் மாமன்னர்களும் இருந்தார்கள், அதனால் அக்காலப்புலவர்கள் காவியம் படைப்

பதற்கு வேண்டிய காவியத்திற்கு இப்பரிசு சிறுதொகைதான் என்றாலும் ஈழநாட்டைப் பொறுத்தளவில் இதைப் பெரும் பரிசாகவே நாம் கொள்ளவேண்டும். பணம் பெரிதல்ல. தமிழ்க்காவியத்திற்கு 500 ரூபாவாவது பரிசளித்துப் போற்றவேண்டுமென்ற மனந்தான் பெரிதாகும்.

ஈழநாட்டின் தூண்டுதலால் ஊக்குவிக்கப்பட்ட கவிஞர்கள் காவியம் படைக்கும் முயற்சியில் முனைந்தனர். ஆனால் எத்தனையோ கவிஞர்களுக்குப் பல இடையூறுகளும் வசதியீனங்களும் ஏற்பட்டு அம்முயற்சி இடையில் நின்றுவிட்டது. காவியம் படைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதற்கு வரும் இன்னல்களையும், வசதியீனங்களையும் அனுபவத்தில் கண்டறிந்தவனாகிய நான் அம்முயற்சியில் வெற்றி கொண்டு, சிறந்த ஒரு காவியத்தைப் படைத்து முதற்பரிசையும் பெற்றுக்கொண்ட கவிஞர் காரை

வளலாயூர்

### --- செ. சிவசம்பு ---

செ. சுந்தரம்பிள்ளையையும், அவருடைய பெருமைமிகு காவியமான சங்கிலியத்தையும் பாராட்டாமலிருக்க முடியாமல் இதை வரைகின்றேன்.

காவியப்போட்டியில்"சங்கிலியம்" முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. ஆனால் இரண்டாம் மூன்றாம் இடங்களைப்பெறுவதற்குத் தகுதியான காவியங்கள் இல்லாமையால் அப்பரிசுகள் அளிக்கப்படவில்லை. பரிசு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்[illegible] நடாத்தப்பட்ட போட்டியாக விருந்தால் போட்டிக்கு அனுப்பப்பட்டவற்றில் மூன்று காவியங்களுக்கு [illegible] லாம். ஆனால் ஈழநாட்டை [illegible] பின்னணியாகக்

விழுந்து மனனப்புகக்காரும் பகைவர்களையும் மன்னித்து உயிர்ப்பிச்சை அளிக்கும் கருணையுள்ளம் கொண்டவனாகவும் விளங்குகின்றான்.

"தப்புதற்கே வழியற்றவ
ராகியச்
சங்கிலி காலில் விழுந்தார்
- அட
இப்பிழை நீங்கள்
இனிப்புரியீரெனில்
ஈவன்உயிரை யென்றான்"

ஈழநாட்டைத் தமிழ்மன்னர்களும் சிங்கள மன்னர்களும் தனித்தனியே ஆண்ட அந்நாளில் தேசிய ஒருமைப்பாடும் ஒற்றுமையும் சிறந்து விளங்கின- அந்நியநாட்டிலிருந்து ஈழநாட்டைக் கைப்பற்ற வந்தவர்களுக்குப் பகைவனாகச் சங்கிலி விளங்கினனேயல்லாமல் சிங்கள மக்களின் உற்ற நண்பனாக விளங்கினான். சங்கிலியின் காலத்திலேயே அந்நியரை இந்நாட்டை விட்டு விரட்டும் பணியில் சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களும் அவர்தம் மன்னனும் பக்கத்துணையாயிருந்தனர் என்பதற்கு மாயாதுன்னை படை

உதவிகேட்டுச் சங்கிலிக்கு எழுதிய கடிதம் சான்றாகும்

"சங்கிலியே என்றனது
அருமை நண்பா
சண்டாளரை எதிர்க்க
வென்னிடத்தே
இங்குள்ள சேனைபலம்
போதாதானால்
இனியதமிட் படை
வந்தால் வெற்றி
கொள்வேன்
சிங்களவர் செந்தமிழர்
என்றபோதும்
தேசத்தால் நாமொன்று
பண்பாலொன்று
எங்கிருந்தோ வந்தவரை
ஒட்டவென[illegible]
இருபேரின் கூட்டுறவும்
சிறந்ததன்றோ"

செந்தமிழ் மக்களை அந்நியராகக் கருதும் சிங்கள அரசியல் வாதிகள் நிறைந்த இந்நாளில் தேசியஒருமைப்

'அருளாகி அன்னையுருவாகி
அன்பர்
அமுதாகி அல்லல்
களையும்
திருவாகி எங்கள் செயலாகி
நாட்டின்
தெய்வமாய் நின்று
திகழும்
பெருவாழ்வு நல்கும் பிழை
யாவுங் கொல்லும்
பெருமாட்டி வீரகாளி
ஒருநாளு முன்னை மறவாத
வுள்ளத்
துறைவாய் நல் வெற்றி
தருவாய்!'

காளியின்அருளோடுதமிழ் வீரர்கள் போர்புரியும் காட்சியை கவிஞர் போர்க்களத்தின் விறுவிறுப்போடு கவிதைகளாகப்படைக்கின்றார்.

'வந்தாரிளஞ் சிங்கம் நிகர்
வண்ணத்தமிழ் வீரர்
பந்தாடினர் பறங்கித் தலை
பலியாகினர் பலபேர்
நொந்தார் உடல் வெந்தார்
உளம்
நைந்தார் பல வீரர்
தந்தோம் உயிர் தந்தோ
மெனச்
சரிவார் பல வீரர்,

போர்க்களத்திலே பறங்கியரின் தலைகளிலே பந்தாடுகின்றனராம் தமிழ் வீரர். பந்து துள்ளித் துள்ளி விழுவது போல கவிஞரிடம் தமிழ்ச் சொற்களும் பந்தாகத் துள்ளி விளையாடுகின்றன. சொற்களிலே பந்தாடும் கவிஞர் சந்தம் மிகு கவிதை தந்து மகிழ்விக்கின்றார்.

செந்தமிழ் வீரர்கள் சிங்கம்
நிகர்த்தவர்
சீறிச் சினந் தெழுந்தார்-
புகார்ச்
சந்தையிரைச்சலோவென்று
மயங்கிடச்
சத்தமிட்டே திரண்டார்-
அந்த
மந்தைகளின்தலை பந்தடிப்
போ மென
மார்பு தட்டிக் குதித்தார்-
நல்லைக்
கந்தன் கணங்களோ வென்
றிடத் தக்கதாய்
காற்றெனவே பறந்தார்.
காற்றெனப் பறந்து தாக்கும் தமிழ் வீரர்களின் முன்

# நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகப் பிரதானமானதும். மிகப் பழமையானதுமாகிய கைத்தொழில், புகையிலைச் சுருட்டுச் சுற்றுவது. இலங்கையில் வேறு சில இடங்களிலும் இத்தொழில் நடந்து வந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் விளையும் புகையிலைக்கு நாடு முழுவதிலும் நல்ல மதிப்பும் கிராக்கியும் இருப்பதால் இங்குதான் மிகக் கூடிய மக்கள் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பத்துப் பேர் இருந்து வேலை செய்யும் சிறிய தொழிற்சாலைகளும், நூறு இருநூறு பேர் வேலைசெய்யும் பெரிய தொழிற்சாலைகளுமாகச் சுமார் அறுபது கொட்டில்கள் இருக்கின்றன என்று மதிப்பிடப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் ஒவ்வொரு நாளும் வேலை நடப்பதில்லை. புகையிலை இருப்புக்கு ஏற்றவாறு வேலை செய்யும் நாட்கள் ஒரு மாதத்தில் கூடும் அல்லது குறையும். இதனால் சுருட்டுத் தொழிலாளருக்கு நிரந்தரமான தொழிலும் மாதச் சம்பளமும் இருப்பதில்லை. ஒருவர் ஒரு நாளைக்கு எத்தனை சுருட்டுச் சுற்றுகிறாரோ அதன்படி கணக்குப்பார்த்து வார முடிவிலோ மாத முடிவிலோ சம்பளம் கொடுப்பார்கள். ஆதலால் சுருட்டுத் தொழிலை ஒரு நித்திய மான பிழைப்பு என்று சொல்லமுடியாது. பல தொழிலாளர் சுருட்டுக் கொட்டிலில் வேலையில்லாத நாட்களில் கூலிப் பிழைப்பு முதலிய வேறு சம்பாத்தியங்களை நாடவேண்டியிருக்கிறது.

இதுவுமன்றி, மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களில் இருப்பதுபோலவே லீவு முதலிய சலுகைகள் சுருட்டுத்தொழிலாளருக்கு இல்லை ஒருவர் சுகயீனம் என்று வீட்டில் இருக்கவேண்டி வந்துவிட்டாலும் அன்றைக்கு அவருக்குச் சம்பளம் இல்லை.

சுருட்டுச் சுற்றுவதை ஒரு நுட்பமான கலையென்று சொல்லலாம். கைச்சுறுசுறுப்பும் அனுபவமும் உள்ளவர்கள் ஒரு நாளில் மற்றவர்களைவிடக் கூடுதலான சுருட்டுகளைச் சுற்றுவார்கள் இப்படித் திறமையானவர்கள் ஆகக்கூடியது ஒரு நாளில் ஆயிரம் சுருட்டுச் சுற்றுவார்கள். ஆயிரம் சுருட்டுக்கு முன்னொருகாலத்

செய்து தங்கள் சம்பளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக்கொண்டு வந்தார்கள். ஆயிரம் சுருட்டுச் சுற்றுபவர்களுக்குப் பதின்மூன்று ரூபாய் என்ற விகிதம் சமீபகாலம் வரை இருந்துவந்தது.

இதைப் பதினைந்துரூபாயாக்க வேண்டுமென்று கோரித்தான் சில சுருட்டுக் கொட்டில்களில் வேலைமறுப்பு இப்பொழுது நடந்து வருகிறது.

சில கொட்டில்கள் என்று கூறியது ஏனென்றால் வேறு கொட்டில் முதலாளிகள் தொழிலாளரின் கோரிக்கைக்குச் சம்மதித்துச் சம்பளத்தை அவர்கள் கேட்டபடி பதினைந்து ரூபாயாக்கி விட்டார்கள். இக்கொட்டில்களில் வழமைபோல வேலை நடக்கிறது. அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்துக்கு, தங்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டபடியால் வேலைக்குத் திரும்பிவிட்டோம் என்று அறிவித்த பின்பே இவர்கள் மீண்டும் வேலைக்கு வந்துள்ளார்கள்.

ஒருவருக்கு நாளொன்றுக்குப் பதினைந்து ரூபாய் சம்பளம் என்றால் மாதத்தில் நானூற்றைம்பது ரூபாய் உழைத்து, பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களையே சுருட்டுத் தொழிலாளர் வென்றுவிட்டார்கள் என்று சிலர் எண்ணக்கூடும். அது தவறு. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கோ மற்றும் வர்த்தக ஊழியர்களுக்கோ இருக்கின்ற லீவு, பென்ஷன், போனஸ், ஓய்வுகாலப்படி [ப்ரொவிடெண்ட் ஃபண்ட்] முதலிய எவ்விதமான சலுகைகளும் அவர்களுக்கில்லை. அதுவுமன்றி முன் கூறியதுபோல மாதம் முழுவதிலும் வேலை இருக்குமென்பதும் நிச்சயமில்லை: வேறு சில தொழில்களுக்கு இருப்பதுபோலச் சம்பள நிர்ணயச் சட்டமும் இவர்கள் விஷயத்தில் தலையிடுவதில்லை.

சுருட்டுத் தொழிலாளர் ஒருவர் முது வயது காரணமாகவோ, நோய் காரணமாகவோ வேலைசெய்ய முடியாதுபோய்விட்டால் அவரையும் அவரது குடும்பத்தாரையும் ஆதரிப்பது தெய்வம் ஒன்றுதான். தெய்வம் பணம் தருமா?

இப்படியான குறைகள் எல்லாவற்றையும் தீர விசாரித்துச் சுருட்டுத் தொழிலாளரை மனிதாபிமானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளாக இருப்பினும சரி பெரிய நாடுகளாக இருப்பினும் சரி அந்த சாஸனத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அத்தனை நோக்கங்களையும் சரி மூலம்மனித உரிமைகளுக்கு முரணான சட்டங்கள் கொண்டுவருவதைத் தடுக்கவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் வாய்ப்பேற்படும்.

## வியட்னாமுக்கு விடிவு

பாரிஸ் பேச்சுவார்த்தைகளின் முடிவு எப்படியிருந்தாலும் வியட்னாமில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதுதான் தமது நோக்கமென்று வியட்னாம் சம்பந்தமாகத் தாம் மேற்கொண்டுள்ள கொள்கை வியட்னாமில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமென்றும் அமெரிக்க அதிபர் நிக்ஸன் நேற்று டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார். தென் வியட்னாமிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் மேலும் திருப்பி அழைக்கப்படுமென்றும் இது பற்றி இன்னும் இரண்டொரு வாரங்களில் தாம் அறிவிப்பதாகவும் அதிபர் நிக்ஸன் கூறியிருக்கிறார்.

வியட்னாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எந்தத்திட்டத்தையும் அமெரிக்கமக்களும் வரவேற்பார்கள், உலக மக்களும் உற்சாகத்துடன் வரவேற்பர். வியட்னாமில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென உண்மையிலேயே அமெரிக்கா விரும்பினால், வியட்னாமிலிருந்து அமெரிக்கா கௌரவமாக வெளியேறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கதாங்கள் தயாராக இருப்பதாக வியட் காங்கியர் தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. வியட்னாமிலுள்ள பிலிப்பைன்ஸ் துருப்புக்களைத் திருப்பி அழைக்க அதிபர் மார்க்கோஸ் உத்தரவிட்டுள்ளார்.

வியட்னாமில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் அங்கு அமைதிநிலவவும் நல்ல சூழ்நிலை உருவாவதற்கு சமயம் வந்துவிட்டதென்பதையே இந்தநிகழ்ச்சிகள் காண்பிக்கின்றன.

மைலாய் கிராமத்தில் வியட்னாமிய மக்கள் பலரை அமெரிக்கத்துருப்புக்களே சுட்டுக்கொன்றதாகவெளிவந்த தகவலைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவ அதிகாரிமீது விசாரணை நடைபெறுகிறதென்று அதிபர் நிக்ஸன் தெரிவித்திருக்கிறார். இது அமெரிக்க மக்களுக்க திருப்திஅளிக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை. மைலாய் சம்பவம்ஒன்றே அமெரிக்கா வியட்னாமிலிருந்து வெளியேறவேண்டிய அவசியத்தைஉணர்த்துவதாகவும், திரு. நிக்ஸனின் வார்த்தையிலிருந்து வியட்னாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் படிப்படியாக திருப்பி அழைக்கப்பட்டுவிடுமென்பது தெளிவு.

வியட்னாமிலிருந்து அமெரிக்கா வெளியேறி வியட்னாம் பிரச்னைக்கு ஐ. நா. மூலம் வியட்னாம் மக்களே தீர்வுகாணவழிவிடுவதுதான் அமெரிக்காவுக்கும் நல்லது; வியட்னாமுக்கும் நல்லது. ஆனாலும் மைலாய் சம்பவம் பற்றி மட்டுமல்ல வியட்னாமில் அமெரிக்கரின் நடவடிக்கைபற்றி ஒரு விசாரணைக்கமிஷன் நியமித்து சகலஅம்சங்களையும் விசாரணை செய்து உலகமக்கள் அறியக்கூடியதாகச் செய்வது அமெரிக்கா தனது நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்ளப் பெரிதும் உதவும்.

## புதிய தபால் நிலையம்

பச்சிலைப்பள்ளி, செவ்வாய்

செம்பியன்பற்றுப் பகுதியைச்சேர்ந்த ஆளியவளைக் கிராமத்தில் விரைவில் ஒரு புதிய தபால் நிலையம் திறக்கப்படவிருக்கிறது. அதன் புதியஅதிபராக ஆளியவளையைச்சேர்ந்த திரு. வ. வ. இராசேந்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## கல்வி ஆலோசகர் வகுப்பு

பச்சிலைப்பள்ளி, செவ்வாய்

கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளில் கல்விபோதிக்கும் ஆசிரியர்களில் கல்வி ஆலோசகர் வகுப்பில் சேர்ந்து படிக்க விரும்பும் 1-ம் தரதராதரப்பத்திரமுடையவர்கள் தங்கள்தங்கள்பெயர் விலாசம் தராதரப்பத்திரம் பெற்ற திகதி ஆகிய விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சிக்கல்வி அதிகாரி எல்லாப்பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.

---

புலவர்களை ஆதரித்து அவர்களுடைய வாழ்வைச் செவ்வனே நடாத்துவதற்குப் பொன்னும் பொருளும் வழங்கவள்ளல்களும் மாமன்னர்களும் இருந்தார்கள். அதனால் அக்காலப்புலவர்கள் காவியம் படைப்பதையே தமது இலட்சியமாகக்கொண்டு, குடும்பப் பொருளாதாரக் கவலைகளின்றிச் செயலாற்றினார்கள். ஆனால் இன்று கவிதையைத்தொழிலாகக்கொண்ட கவிஞர்கள் யாருமேயில்லை. தமது கற்பனையிற் கருக்கொள்ளும் எண்ணங்களைச் சிறுகவிதைகளாக வடிக்கின்ற கவிஞர்கள்தான் இன்றிருக்கின்றார்கள். கவிதையைத் தொழிலாகக்கொண்டால் அக்கவிஞர்களுடைய வாழ்க்கையை வளமுற நடாத்துவதற்குப் பொன்னும் பொருளும் அள்ளிக்கொடுக்கும் வள்ளல்கள் இக்காலத்திலில்லை காவியம் படைக்கும் திறன் படைத்த எத்தனையோ கவிஞர்களிருந்தபோதும், அவர்களுக்கேற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளும், வாழ்க்கை வசதிகளும் இல்லாமையினாற்றான் அவர்கள் காவியம் படைக்கும் முயற்சியில் ஈடுபடாமலிருந்தார்கள்- இருக்கிறார்கள்.

காவியம் என்ற பெயரை வைத்துச் சில கவிஞர்கள் மனித வாழ்க்கையில் நடைபெறும் சிறு நிகழ்ச்சிகளைத் தொடர் கவிதைகளாக்கி வெளியிட்ட நூல்கள் சில இருக்கின்றன. ஆனால் இவை காவிய இலக்கணத்தின் இரண்டொரு அம்சங்களுக்கமையத்தானும் எழுதப்படவில்லை. காவியம் என்ற பெயர் படைத்த சிறுகவிதை நூல்கள் இருந்தாலும், ஈழத்தில் உண்மையான காவியம் இல்லையென்பதை நாம் மனவருத்தத்துடன் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும்.

### 'ஈழநாடு' தீர்த்தகுறை

தமிழினத்திற்கு உண்மையான தொண்டு செய்யும் தமிழர்களுடைய தமிழ் நாளிதழான 'ஈழநாடு' தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் போது, ஈழத் தமிழ் இலக்கிய உலகில் நீண்ட நெடுங்காலமாகத் தீர்க்கப்படாதிருந்த பெருங்குறையைத் தீர்க்க முன்வந்தது. இலக்கியப் போட்டிகளை நடாத்தி எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், ஈழநாட்டின் வரலாறு கண்டிராதபெரும் பரிசில்களை அளிக்கத்தீர்மானித்தது. காவியஇலக்கணத்திற்கமைய ஈழநாட்டுச் சம்பவங்களைக்கொண்டு படைக்கப்படும் முதலாவது காவியத்திற்கு 500 ரூபாபரிசளிக்கப்படுமென அறிவித்தது.

எத்தனையோ மாதக்கணக்கான முயற்சியில் உருவாக ... திற்க ... நடாத்தப்பட்ட போட்டியாகவிருந்தால் போட்டிக்கு அனுப்பப்பட்டவற்றில் மூன்று காவியங்களுக்கு பரிசளித்திருக்கலாம் ஆனால் ஈழநாட்டை ... பின்னணியாகக் கொண்டு எழுந்த மிகச் சிறந்த காவியங்களுக்கே பரிசளிக்கவேண்டுமென்ற இலட்சியத்தைக்கொண்டபடியாற்றான் இரண்டாம் மூன்றாம் பரிசுகள் அளிக்கப்படவில்லை. இதனால்முதலாம் பரிசுக்கும் தகுதியானதென்று தெரிவுசெய்யப்பட்ட காவியத்தின் தரத்தை நாம் கணித்துக்கொள்ளலாம்.

கடந்த ஆறு மாதங்களாக வாராவாரம் ''சங்கிலிய'த்தைவெளியிட்டுத் தமிழ் கூறும் நல்லுலகம் படித்தின்புறுமாறும், காவியத்தின்தரத்தைக் கற்றோரும் மற்றோரும் அறியுமாறும் அருந்தொண்டாற்றியது ஈழநாடு ஆரம்பமாமுதல்முடிவுவரை காவியத்தைத்தொடர்ந்து படித்து அதன் கற்பனைத் திறனையும் கவிதைச் சிறப்பினையும் கருத்தின் ஆழத்தையும் பாத்திரப் படைப்பின் மேன்மையையும் கதையைத் தொடர்புகுன்றுதுஉச்சக்கட்டத்திற்கு வளர்த்துச் செல்லும் சாதுரியத்தையும் இரசித்து உள்ளம் உவகையுற்றேன்.

### தேசியஒற்றுமை

நாடிழந்து நல்ல தமிழால் ஆளும் உரிமையிழந்து நாட்டினப்பற்றும், மொழிப்பற்றும் அற்றவராய் நலிவுறும் தமிழினத்திற்குத் தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் சைவத்தையும் அந்நிய நாட்டினரின் ஆக்கிரமிப்பிலிருந்து காத்திடத் தன்மான உணர்வுடனும் வீரத்துடனும் போராடிய வரலாற்றுப் புகழ்மிக்க மாவீரனைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர்.

'நாடு பிடித்தனர்
என்றுமே - சொல்ல
நாணமோ வெட்கமோ
மாடுகளா அங்கு
வாழ்பவர் - ஒரு
மான உணர்ச்சியு
மில்லையா - வெறும்
போடு தடிகளாய்
வாழ்ந்திடும் - அந்தப்
புல்லர்கள் என்ன
புரிந்தனர் - எந்தக்
காடுகளுக் கோடிச்
சென்றனர் - இவர்
கன்னித் தமிழ்க்குடி
மக்களா'

அந்நியர் நாடுபிடிக்க அதைக் கண்டும் தடுக்காதிருக்கும் மக்களை வெறும் மரக்கட்டைகளாகவே சங்கிலியன் கருதுவதாகக் கூறுகிறார்.

தன்மான உணர்வைத் தட்டியெழுப்பி வீரமுடன் நாட்டைக் காக்கும் போர் புரிந்த மன்னன் தன்காலில்

எங்கிருந்தோ வந்தவரை ...
ஒட்டவெங் ...
இருபேரின் கூட்டுறவும்
சிறந்ததன்றோ''

செந்தமிழ் மக்களை அந்நியராகக் கருதும் சிங் ... அரசியல் வாதிகள் நிறை ... இந்நாளில் தேசியஒருமைப்பாட்டின் அவசியத்தையும் தமிழருடைய நாட்டுப்பற்றையும் உணர்த்தும் இவை போன்ற கவிதைகள் மிகமிக அவசியமாகும். சிங்கள தமிழ் மக்களின் ஒற்றுமையாற்றான் இலங்கையைக் காக்க முடியுமென்று மாயாதுன்னை அன்று உணர்ந்தது போல இன்றும் தமிழர் உரிமை பெற்றுச் சிங்கள மக்களோடு ஒன்றுபட்டு நிற்கவேண்டிய அவசியத்தைச் சிங்கள அரசியல் வாதிகள் உணர்வார்களா?

### காதலும் வீரமும்

வீரமும் காதலும் தமிழரின் இருகண்கள் போன்றவை. வீரனாகிய சங்கிலியனின் வாழ்வில் காதலுந் தன் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. 'முல்லை மொட்டினை வெல்லும் முறுவலும்', நீறில்லாத நெருப்பெனும் மேனியும் ஊறில்லாத இனிய வடிவுங்கொண்ட' 'ஞாலம் போற்றுமோர் நங்கை சங்கிலியின் ஒப்பில்லாத வுள்ளத்திலே இடங்கொண்டாள்.

சோலையிலே மருங்கிருக்கும் காதலரின்.........

'நாலு கண்கள் அமுதம்
பருகின
நாணம் மேலிடநங்கை
குனிந்தனள்
நூலையொத்த மருங்குல்
துவன்றிட
நுட்பமாய் அணைத்தன்பு
சொரிந்தனன்'

என்று தமிழ்ப்பண்பு மிளிரும் காதலரின் களிப்பினைக் காட்டுகின்றார் கவிஞர்.

காதல் மோகத்தால் தன் கடமையைச் சங்கிலி மறப்பவனில்லை. கடமையை முடித்துக் காலந்தாழ்த்தி வந்தால் கன்னி ஊடுகின்றாள்:

'கண்மணி பெரும் சீற்ற
மேன் உன்னைக்
காக்க வைத்ததும்
கோபமா
மண்ணை யாளுமென் சோலி
கள்பல
மங்கையேன் அறிகில்
லையோ'

என்று வீசுகின்ற மங்கையிடம் கெஞ்சி அவள் ஊடலைத் தீர்த்துக் கூடுகின்றான்.

காதலும் வீரமும் விளையாடும் உள்ளங்கொண்ட சங்கிலியிடம் கருணையும் கடவுள்பக்தியுமிகுந்து காணப்படுகின்றன. எக்காரியத்தை தொடங்கும்போதும் இறைவழிபாட்டுடன் தொடங்கும் சங்கிலியின் பண்பை போருக்குப் புறப்படுமுன் அவன் செய்யும் வழிபாட்டின் மூலம் புலப்படுத்துகின்றார் கவிஞர்.

மார்பு தட்டிக் குதித்தார்-
நல்லைக்
கந்தன் கணங்களோ வென்
றிடத் தக்கதாய்
காற்றெனவே பறந்தார்.

காற்றெனப் பறந்து தாக்கும் தமிழ் வீரர்களின் முன் நிற்கும் ஆற்றலற்ற பறங்கிப்படை வீரர்
எடுத்தார் பெருமோட்டம்
மிக
இளைத்தார் களைப்புற்றார்
என எள்ளி நகையாடுகின்றார் கவிஞர்.

கெட்டவர்கள் கொட்டமடங்கி ஓடும்போது கைகொட்டிச் சிரிக்கும் கவிஞர் நல்லவர்கள் வருந்தும் போது சொல்லவொண்ணாத் துயர் உறுகின்றார். துரோகியின் சதியால் சங்கிலியைச் சூழ்ந்திருக்கும் இன்னல்களை எண்ணி ஏங்கிக் கண்ணீர் சிந்தும் வடிவழகியோடு சேர்ந்து கவிஞரும் கண்ணீர் விடுகின்றார்.

சொரிந்தனள் கண்ணீர்
தந்தை
துரோகத்தை எண்ணி
எண்ணி
எரிந்தனர் நெஞ்சம் ஐயோ
என் செய்வேன் இறைவா
என்றே
பரிந்தனள் நாட்டை
எண்ணிப்
பதறினள் பதை
பதைத்துச்
சரிந்தனள் தரையின்
மீனாய்த்
தவித்தனள் தையல்
நல்லாள்.

உள்ளம் துன்பத்தில் மூழ்கியிருக்கும்போது பிறக்கின்ற ஒவ்வொரு வார்த்தையும் எவ்வளவோ பெருங்கருத்தைத் தம்முள் அடக்கியவையாயிருக்கும். பாத்திரங்களோடு ஒன்று அவர்களாகவே மாறிவிட்ட கவிஞரும் சொற்களை மிகச் சிக்கனமாகவே கையாண்டு உணர்ச்சியின் ஆழங்களைப் புலப்படுத்துகின்றார். துரோகிகளிடமிருந்து நாட்டைக் காத்துவிட்டோம் என்று நம்பிக்கையோடு வடிவழகியிடம், தோழி கூறும்போது அந்த நம்பிக்கையையே நாசமாக்கும் வெறியோடு அப்பாமுதலி அங்கு நிற்பதை

'நன்று நாம் செய்து
விட்டோம்
நாட்டினைக்காத்து
விட்டோம்
சென்று நான் வருவே
சென்று
திரும்பினாள் 'அப்பா
நின்றான்'

என்ற வார்த்தைகளின் மூலம் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

மற்றவர்களுக்கு நாசம் விளைவிக்க எண்ணித் தன் குலக்கொழுந்தையே நாசமாக்கிவிட்ட அப்பாமுதலி தன்னுயிரை வாளினால் மாய்த்துக்கொண்டதை

''வருகிறேன் என்றான்
சென்றான்''

என்ற மூன்று சொற்களின் மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

நாட்டுப்பற்று மிக்கவர்கள் மறைந்தாலும் அவர்களை மக்கள் மறக்கமாட் கள் என்பதை

''மறந்தனன் மகிதலத்தை
மக்களால் மறக்கவொண்
ணாள்''

என்ற அடிகளின் மூலம் இந்நாளில் நாட்டுப் பற்றின்றி வாழுகின்ற நயவஞ்சகர்களுக்குக் கூறித் தமிழ் அன்னைக்கு ஒரு சங்கிலியாகச் ''சங்கிலியத்தைச்'' சூட்டுகின்றார் கவிஞர்.

---

றவர்களைவிடக் கூடுதலான சுருட்டுகளைச் சுற்றுவார்கள் இப்படித் திறமையானவர்கள் ஆகக்கூடியது ஒரு நாளில் ஆயிரம் சுருட்டுச் சுற்றுவார்கள். ஆயிரம் சுருட்டுக்கு முன்னொருகாலத்தில் ஐந்து ரூபாயே சம்பளமாயிருந்தது. வாழ்க்கைச் செலவு ஏற ஏறச் சுருட்டுத் தொழிலாளரும் (மற்றத் தொழிலாளர் போலவே) முதலாளிகளோடு வாதம் ... ரையும் அவரது குடும்பத்தாரையும் ஆதரிப்பது தெய்வம் ஒன்றுதான். தெய்வம் பணம் தருமா?

இப்படியான குறைகள் எல்லாவற்றையும் தீர விசாரித்துச் சுருட்டுத் தொழிலாளரை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டியது முதலாளிகளினதும் அரசாங்கத்தினதும் மறுக்கமுடியாத கடமையாகும்.

—வழிப்போக்கன்

## 150குடும்பங்கள் நிலை; அமைச்சரை சந்திப்பர்

விஸ்வமடு, செவ்வாய்

பரந்தன், கண்டாவளை வீதியில் வாழும் 150 குடும்பங்கள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகிறார்களாம். பத்து வருடமாக நிரந்தரமாக இந்த இடத்திலேயே இவர்கள் வசித்துவந்தபோதிலும் போதிய பாதுகாப்பு இல்லாமல் எந்நேரத்திலும் ஆபத்தான சூழ்நிலையிலிருப்பதாக யுகார் தெரிவிக்கின்றனர். ஏழைகளான இவர்கள் வசிக்கும் இந்தக் காணிகளை சிலர் சொந்தம்கொண்டாட முன்வந்திருப்பதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடமும் இதுசம்பந்தமாக புகார் தெரிவிக்கப்பட்டது.

உணவு உற்பத்திக்கு அதிக ஊக்கம் கொடுக்கும் தேசிய அரசாங்கம் இந்த விவசாயிகளின் கஷ்டங்களை தீர்த்துவைக்க உடனடி நடவடிக்கை எடுத்து துயருறும் இந்த விவசாயிகளின் துன்பக்கண்ணீரைத் துடைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் ஐக்கிய தேசியக் கட்சி கிளிநொச்சி கிளை செயற் குழு நேற்று கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மேலா இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்தது. இதுவிடயமாக காணி நீர்ப்பாசன மின்சார துறை அமைச்சர் திரு சி. பி. டி. சில்வாவையும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கிளிநொச்சி தூதுக்குழுக் கோஷ்டி ஒன்று அதிவிரைவில் சந்தித்துப் பேசஇருக்கிறது.

## 8-வது மகாநாடு

நாவலப்பிட்டி, செவ்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் 8-வது மகாநாடு டிசம்பர் 14-ம், 15-ம், 16-ம் திகதிகளில் நாவலப்பிட்டி ஜயதிலக்கா திடலில் நடைபெறவுள்ளது.

காந்திநகர் என பெயர் சூட்டப்படும் மகாநாட்டு பந்தலை நகரபிதா ஜனாப் ஏ. பதுர்டீன் சம்பிரதாய முறைப்படி திறந்துவைப்பார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள் தென்னக திரைப்படக் கலைஞர்கள் ஆகியோர் இவ்விழாவில் பங்குபற்றுகின்றனர்.

இவ்விழாவிற்கான துரித வேலைகளில் சங்க உத்தியோகஸ்தர்கள் செயல்பட்டுவருகின்றனர்.

### சுருட்டுத்

[1-ம் பக்கத் தொடர்சி]

விக்கப்பட்டது.

உரும்பிராயில் நேற்று மாலை சுருட்டுத்தொழிலாளர்களின் கூட்டம் நடைபெற்றது. 'தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை வேலைக்குத் திரும்பமாட்டோம் என்ற சாதனையை நிலைநாட்டியவர்கள் சுருட்டுத்தொழிலாளர்கள்' என்று திரு. ஆ. துரைராஜசிங்கம் இக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இன்றுமாலை அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கக்கூட்டமொன்று கோண்டாவில் கிழக்கு சந்தியில் நடைபெறவிருக்கிறது. திரு. க. வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம், திரு. அ. விசுவநாதன் உட்பட பலர் பேசுவர்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org